# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 13 ஞாயிற்றுக்கிழமை (26-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:103




நேற்றைய சமாதானப் பேரணியில் கலந்துகொண்ட மதகுருமார்கள் பாடசாலை மாணவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை படங்களில் காணலாம்.

# பல்லாயிரக்கணக்கானோர் நேற்று யாழ்.நகரில் பேரணி

## சமாதானத்தை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்26

**யுத்தத்தை நிறுத்தி சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கோரி நேற்று யாழ்.நகரில் நடைபெற்ற சமாதானப் பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.**

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் 60க்கும் மேற்பட்ட அமைப்புகள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டன. பேரணியில் கலந்து கொண்டோர் சமாதானத்தை வலியுறுத்தும் சுலோக அட்டைகளைத்தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் சென்று கொண்டிருந்தனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயமுன்

(12ஆம் பக்கம் பார்க்க)

### பேரணியில ஒலித்த கோஷங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்26

நகரில் நேற்று நடைபெற்ற சமாதானப் பேரணியில் ஒலித்த சில கோஷங்கள் வருமாறு:-

* "வேண்டாம் வேண்டாம் யுத்தம் வேண்டாம்"
* "வேண்டும் வேண்டும் சமாதானம் வேண்டும்"
* "பேச்சை நடத்துவோம்; யுத்தத்தை நிறுத்துவோம்"
* "வேண்டும் பேச்சுக்கு - 3 ஆம் தரப்பு வேண்டாம் இங்கு வீணான சண்டை!"
* "தொழிலைச் செய்ய தொந்தரவு செய்யாதே!"

(12ஆம் பக்கம் பார்க்க)





ஊர்வலத்தின் ஆரம்பத்தில் 'சமாதானப் பேரணி' என்னும் பதாகையுடன் பேரணியினர் புறப்பட்டு வரும் காட்சி.

## இராணுவ அதிகாரிகள் 7பேர் கட்டாய ஓய்வில்

கொழும்பு, மார்ச் 26

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வன்னியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள்-3 தாக்குதலின் போது இராணுவத்துக்கு ஏற்பட்டபாரிய தோல்விகளுக்குப் பொறுப்பானவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 7 இராணுவ உயர் அதிகாரிகள் அரசாங்கத்தினால் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் கஜபா படையணியின் பிரதம கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் காமினி குணசேகர, தாக்குதல் இடம்பெற்றபோது வன்னி மாவட்டக் கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா, பிரிகேடியர் லங்கா அத்துல தேவ், பிரிகேடியர் போரான் கேணல் முறமுதலிகே மேஜர் சந்திரசிறி, மேஜர் மனோஜ் பீரிஸ் ஆகியோரே கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு உதவியுடன் சமாதானம் ஏற்படுத்துக

### பேரணியின் இறுதி நிகழ்வில் யாழ்.ஆயர் அறைகூவல்

யாழ்ப்பாணம்,மார்ச்26

யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துமாறு யாழ். மக்கள் சார்பில் அறைகூவல் விடுக்கின்றோம்.

மேற்கண்டவாறு யாழ்.ஆயர் வண.பிதா தோமஸ் சௌந்தரநாயகம் கூறினார்.

யாழ்நகரில் நடைபெற்ற சமாதானப் பேரணியின் இறுதியில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆசியுரை வழங்கும் நிகழ்வில் அவர் உரை நிகழ்த்தினார். சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்பின் உபதலைவர்டி.ஆர்.அருமைநாயகம் தலைமை

( . ம் பக்க )

## வவுனியா - கொழும்பு ரயிலில் குண்டு மீட்பு!

கொழும்பு,மார்ச்26

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படவிருந்த தபால் ரயிலில் நேற்று குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

நேற்றிரவு 9.15 மணிக்கு வவுனியா ரயில் நிலையத்திலிருந்து புறப்படவிருந்த ரயிலில் பயணிகள் அனைவரும் ஏறிய பின்னர் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனையின் போது ரயில் பெட்டி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு அந்தக் குண்டு பாதுகாப்பாக மீட்கப்பட்டு வெளியே கொண்டுவரப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டது.

ரயில் பெட்டியில் கிடந்த வெடிகுண்டினால் நேற்றிரவு ஒரு மணித்தியாலதாமதத்தின் பின்னரே கொழும்புக்கான ரயில்சேவை இடம்பெற்றது.

## நோர்வேயின் புதிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகிறார்!

கொழும்பு,மார்ச்26

நோர்வேயின் புதிய வெளிவிவகார அமைச்சர் டோப் ஜேன் ஜக்லாண்ட் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் நோர்வேயின் புதிய அரசாங்கம்கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாக அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எடுத்து விளக்குவார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கும் முயற்சியில் நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே. அதன் பின்னர் நோர்வேயில் பதவியில் இருந்த அரசு கவிழ்ந்து புதிய அரசு பதவியேற்றது.

புதிய அரசு பதவியேற்றதும் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சி தொடரும் என்று அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் நோர்வேயின் புதிய அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து விளக்கவும் இலங்கை அரசினதும் எதிர்க்கட்சியினதும் தற்போதைய நிலை குறித்து அறிந்துகொள்ளவும் புதிய வெளிநாட்டமைச்சர் இங்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளார்.

அதே சமயம் - நோர்வேயின் புதிய அரசினால் அழைக்கப்பட்டிருந்த இலங்கைக்கான நோர்வே தூதர் ஜோன் வெஸ் பேர்க் கடந்த 21ஆம் திகதி இலங்கை திரும்பியதும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(12ஆம் பக்கம் பார்க்க)



பேரணியின் இறுதியில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டோரில் மேலும் ஒரு பகுதியினர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# 31 ஆவது நாள் கண்ணீர்ப்பூக்கள்

எமது உற்ற நண்பரும்
குடும்ப உறவினருமான

## கனகசபை நித்தியானந்தன் (ஆனந்தன்)

(மாவிட்டபுரம்)

அவர்கள் 25.02.2000 அன்று இறையடி எய்தியமையையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா மாவைக் கந்தனின் பாத கமலங்களில் சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தின் குல விளக்கு அணைந்ததையா!**
**விதி தவறாது என்று சொல்லிச் சாய்ந்தீரையா!**
**அன்பு ஆனந்தனின் குரலோசை இனிக்கேட்குமா?**
**எம்மைக் கதற வைத்துவிட்டாயே! ஆண்டவனே!**
**இது தகுமோ? நீதியோ? முறையோ?**
**மலர்ந்தும் மலராத மும்மலர்களை மறந்து**
**எங்கு தான் சென்றாய் ஆனந்தனே!**

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

கவலையுடன் வாடும்
கந்தையா தங்கராசா குடும்பத்தினர்
(செல்வம்)

291, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(C/11535)

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் நிறுவன உயர்தர கணித ஆசான்

## திரு A.பத்மநாதன்

ஆசிரியரின் தாயார்

## ஐயாத்துரை சுந்தரம்

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிரு ரியூசன் சென்ரர்,
கோண்டாவில்.

(74846)

## ஆணைக்குழு நியமிக்கக் கோரிக்கை

குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கோரும் கடிதம் ஒன்றை அகிலஇலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை -

குமார் பொன்னம்பலத்தின் மரணம் குறித்து விசாரணைகளை நடத்தி வரும் பொலீஸார் சீரான முறையில் விசாரணைகளை நடத்துவதாகத் தெரியவில்லை என்றும் இந்தக் கொலை விசாரணையை சரியான முறையில் நடத்துமாறு பொலீஸாருக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என்றும் கோரி சட்டமா அதிபருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (இ)


**ராஜா**
யாழ்ப்பாணம்
*3 ஆவது வாரமாக*
ரஜனிகாந்த்,
சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன், சிவாஜி
மற்றும் பலர் நடித்த
*படையப்பா*
காட்சிகள்
10.30, 2.00,5.00
(C/11349)



**லிபேட்டி**
அச்சுவேலி
இன்று முதல்
சிம்ரன், விஜயசாந்தி
நடிப்பில்
*தலைவி*
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P: 070-212223
070-212678
Fax No:- 0094 - 70212223
(74706)


# முதலாம் ஆண்டு நெஞ்சகலா நினைவுகள்



அன்னையின் மடியில்
22
-
06
-
1961

ஆண்டவன் அடியில்
23
-
03
-
1999

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

## அமரா இரத்தினம் புனிதராசா

(செல்வராசா)

(வர்த்தகர் - சாவகச்சேரி)

திதி: 26-03-2000

எத்தனை எத்தனை நினைவுகள் கொண்டு
அங்கு சென்றாயே மகனே!
அத்தனையும் அறிய நீ அறியாயமாக
உயிர் துறந்தாயே மகனே!
சத்தியம் தவறிய சதிகாரர் கூட்டமோ
புனிதன் உன்னை சாகடித்தனர் - நாம்
கத்தினாலும் எம் துயரம் ஆறாது
இப்புவியில நாம் வாழும் வரை!

பிரிவினால் துயருறும்
**தகப்பன், தாய், மனைவி,**
**பிள்ளைகள், சகோதரர்கள்,**
**உறவினர்கள்.**

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(C/11520)

# கண்ணீர் அஞ்சலி

மட்டக்களப்பு பிராந்திய பயிற்சி நிலையத்தில்
பயிற்சிபெற்று நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் வேளையில்
அகால மரண மெய்திய

## கோபாலசுந்தரம் கணேசா

(பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்
தொழிற்சங்கம் - யாழ்மாவட்டம்

(74837)

# கணேசா அவன் காலடிக்கு காணிக்கையாகின்றன எம் கண்ணீர்ப் பூக்கள்!



**தோற்றம்:**
**23-04-1976**

**மறைவு:**
**23-03-2000**

எழில் கொஞ்சு யாழ்நகரின் அரியாலை மண்ணினிலே
கல்வியொடு விளையாட்டுமென இருகண்ணின் ஒருகண்ணாய்
கோபாலசுந்தர தம்பதியர்க்கு எழில் வண்ண கோபால
வண்ணமுடன் வந்துதித்த மாதவனே கணேசா!

உன் கல்வி தலை சிறக்க யாழ். இந்துக் கூடத்திலே
நீ கல்வியினை வாஞ்சையுடன் தேடலானாய்.
விளையாட்டும் அதன் பயன் உடல்வாகும் கொண்டவனே!
உயர்தரத்தை முடித்துவிட்டு கீழ்த்திசைக்கு நீவிரைந்தாய்.

மீன்பாடும் தேன்நாட்டில் பீ.எச்.ஐ நீ செய்தாய்
ரெக்னிக்கல் கொலிஜினிலே சிவில் எஞ்சினியர் தனைத்
தொடர்ந்தாய்
உன்கல்வி உயர்சிறப்பால் யாழ்.சர்வகலாசாலையிலே
பௌதிக விஞ்ஞானம் தனைக் கற்க தகுதியுடன் தெரிவானாய்.

மில்லேனியம் ஆண்டில் பட்டப்படிப்பைத் தொடர்ந்தாய்
எல்லோருடனும் ஒன்றிணைந்தாய், நண்பனானாய்
பல்கலையிலே உன் கலைத்துவம் அது ஒரு தனித்துவம்
பல்லோரும் போற்ற பல்துறை வல்லவனாய் நீ மிளிர்ந்தாய்!

கட்டுறுதியுள்ளவுடல், கண்ணினிலே நல்ல குணம்
ஒட்டுறவாடவே நாலுமொழி நன்றாய் உரைப்பாய்
வலைவீசும் கண்கள், அன்புவலை போடும் இளமுறுவல்,
ஆழமான நட்புறவு இவை உன் தனியியல்பு.

கிரிக்கட் பழகிடவே வைகறை நீ வருவாய்
பகிடிக்கதை அது உனக்கோர் தனிக்கலை
கிண்டலொடு பயிற்சியும் முடியவே வீடு மீளுவாய்
ஆங்கில வகுப்புக்காய் பல்கலையில் ஒன்றிணைவோம்.

கிரிக்கட் பழகிவிட்டு ஆங்கில வகுப்புக்கெனச் சென்ற உனை
சரிக்கட்டுவான் எமன் என்று யார் தான் நினைத்திருந்தார்.
மரிக்கட்டும் என்றோ ஆண்டவனும் பார்த்திருந்தான்.
எரிக்கப்பட்டு உன் உடல் போகலாம் என்றென்றும்
அழியாது உன் புகழ், மறையாது உன் உருவம் எம் மனதைவிட்டு.

**விஞ்ஞானபீட புகுமுக மாணவர்கள்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(74836)

# தற்கொலை முயற்சிகள் குடாநாட்டில் அதிகரிப்பு

## 2 மாதங்களில் 77 பேர் நஞ்சருந்தினர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரித்து வருகிறது.

பல்வேறு பிரச்சினைகள், நெருக்கடிகள், தகராறுகள் காரணமாக மனமுடைந்து தற்கொலை செய்வதற்காக நச்சுப் பொருள்களை அருந்திய 77 பேர் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக ஆஸ்பத்திரிப் பதிவேடுகளில் இருந்து தெரியவருகிறது.

ஜனவரிமாதம் நஞ்சு அருந்திய நிலையில் 36 பேர் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஐவர் உயிரிழந்தனர். பெப்ரவரிமாதம் நஞ்சு அருந்திய 41 பேர் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஐவர் மரணமாகியுள்ளனர்.

நஞ்சு அருந்திய பலரும் குடும்பத்தகராறுகள் காரணமாகத் தற்கொலை செய்ய முயன்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். ஆஸ்பத்திரி தவிர்ந்த தென்மராட்சி வடமராட்சிப் பகுதி ஆஸ்பத்திரிகளிலும் இக்காலப் பகுதியில் நஞ்சு அருந்திய பலருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. (ஐ–139-15)

## மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை
## அறிவித்தல்

வழக்கு இல. 17613/ ஈடு.

வேலுப்பிள்ளை மயில்வாகனமும்
பெண் சுந்தரலக்குமியும், புலோலி தெற்கு, புலோலி.
— வழக்காளிகள்

எதிர்

கணபதிப்பிள்ளை முருகமூர்த்தியும்
கணபதிப்பிள்ளை கைம்பெண் பெரியநாச்சிப்பிள்ளையும்
— இருவரும்
புலோலி தெற்கு, புலோலி.
— எதிராளிகள்

2000 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 ஆம் திகதி

எதிராளிகள் தங்கள் வீட்டில் இல்லாமையாலும் அவர்கள் வீட்டில் அழைப்புக் கட்டளை ஒட்டப்பட்டும் அவர்கள் மன்றில் தோன்றாதபடியால் குறிப்பிட்ட எதிராளிகளோ அல்லது இந்த வழக்கில் அக்கறையுள்ள எவரேனும் இந்நீதிமன்றில் 31—03—2000 ஆண்டு காலை 9.00 மணிக்குத் தோன்றி ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி,
ம. செல்வரத்தினம்
பதிவாளர்

ஆக்கம்:
இ. சதானந்தன்
வழக்காளியின் சட்டத்தரணி

(சி/ 11531)

## இடமாற்றம் ரத்தானது

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் சோ. விக்கினேஸ்வரனின் கல்முனைக்கான இடமாற்றத்தை கடற்றொழில் அமைச்சர் ரத்துச் செய்துள்ளார்.

இவரது இடமாற்றம் தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சருடன் கலந்துரையாடலின் பேரில் இந்த இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ–3)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய முன்னாள் அதிபரும் தற்போதைய வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரியுமான

உயர்திரு. சோ. தில்லைநாதன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர்)
அவர்களின் அன்புத் தந்தையார்

### உயர்திரு. கா. சோமசுந்தரம்

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவும் குடும்பத்தார் மனஅமைதி பெறவும் நயினை நாகபூஷணி அம்பாளை வேண்டிக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

யா/நயினாதீவு மகா வித்தியாலயம்,
நயினாதீவு. (74814)

## 'காட்போன்' தொலைபேசி நிலையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

'காட்போன்' தொலைபேசி நிலையங்கள் ஆரியகுளம் சந்தி மற்றும் பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொலைபேசி நிலையங்களில் தொடர்புகளைப் பெறுவதற்கான 'காட்'டுக்களை யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தின் கட்டணங்கள் செலுத்தும் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. [ஐ–3]

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. செ. நடேசகாந்தன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி செல்வதி செல்லையா

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்,
புங்குடுதீவு. (74802)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கு. கோபாலசுந்தரம்
அவர்களின் சிரேஷ்ட புதல்வன்

### அமரர் கோபாலசுந்தரம் கணேசா

அவர்களின் அகால மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த மனவேதனையும் அடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களும்
இணைந்த பாடசாலைகளான
யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை
யா/பூம்புகார் அ. த. க. பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களும்.
[74807)

## கலந்துரையாடல்

வலி. வடக்கு, மார்ச் 26

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வலி. கிழக்குப் பிரதேச சபை அச்சுவேலி உபபணியகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபைக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகப் பிரதிநிதிகள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்துகொள்வர். (க-86)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன மாணவர்களான
மதிரூபன் அவர்களின் அன்புத் தந்தை
**மதியாபரணம்** அவர்களினதும்
ஜெயானந்தசிவம் அவர்களின் அன்புத் தந்தை
**இராசரத்தினம்** அவர்களினதும்

மறைவு எம்மையெல்லாம் துயரில் ஆழ்த்த எமது இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.
(74819)

## இதய அஞ்சலி



23—03—2000 அன்று அகால மரணமடைந்த
எமது நண்பன்

### கோபாலசுந்தரம் கணேசா

(யாழ்-இந்துக்கல்லூரி, 1995 கணிதபிரிவுமாணவன்)

அவர்கட்கு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

1997 ஆம் ஆண்டு படவரைஞர்துறை
மாணவர்கள்,
யாழ். தொழில்நுட்பக் கல்லூரி,
(74803) கொக்குவில்.

## உயர்தரத்தில் கலைத்துறை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் ஜி. சி. ஈ உயர்தரத்தில் கலைத்துறை வகுப்பை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரிச் சமூகத்தினரும் பழைய மாணவர் சங்கத்தினரும் விடுத்த கோரிக்கையை அடுத்து தமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மூலம் இந்த அனுமதியைப் பெற்றுக் கொடுத்ததாக ஈ. பி. டி. பி. அமைப்பின்வட்டுக்கோட்டை அமைப்பாளர் ந. திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ–3)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
23
—
04
—
1976



உதிர்வு:
23
—
03
—
2000

### கோபாலசுந்தரம் கணேசா

(யாழ். தொழில்நுட்பக் கல்லூரி – மாணவன்)

எமது சக மாணவனின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா நற்சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

மாணவர்கள்,
2 ஆம் வருட குடிசார் எந்திரவியல்
(Civil Engineering)
(74824) யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

# வவுனியா நலன்புரி நிலையங்களில் யாழ். மாவட்ட குடும்பங்கள் 533

## இங்கு குடியமர்த்த விவரம் சேகரிப்பு

மூளாய், மார்ச் 26

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 533 குடும்பங்கள் தொடர்ந்தும் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன.

இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த நலன்புரி நிலையங்களில் இரண்டு வருடங்களுக்கு மேலாக தங்கியிருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

இந்தக் குடும்பங்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதில் உள்ள சாத்தியம் அல்லது சாத்தியமற்ற தன்மைகள் குறித்து யாழ். செயலகம் தற்போது தகவல்களைச் சேகரித்து வருகிறது. இதற்கு வசதியாக இக்குடும்பங்களின் பெயர் விவரங்கள் குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களது சொந்த வதிவிடப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியா இல்லையா என்பதையும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதியா இல்லையா என்பதையும் அடிப்படை வசதிகள் கிடைக்குமா இல்லையா என்பது போன்ற விரிவான விவரங்கள் தற்போது பிரதேச செயலக ரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த விவர அறிக்கை பரிசீலிக்கப்பட்டு மீளக்குடியமர்வுக்குச் சாத்தியமான குடும்பங்கள் அனைத்தும் உடனடியாக யாழ். குடாநாட்டுக்கு அழைத்துவரப்பட்டு மீளக் குடியமர்த்தப்படவுள்ளன.

(ஐ-99)

# மறவன்புலோ கடற்கரையோர வீடுகள் பரவலாகச் சேதம்

## பார்க்கச் சென்றோர் அதிர்ச்சி

தென்மராட்சி, மார்ச் 26

மறவன்புலோ கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகள் பலத்த சேதமடைந்து அப்பகுதி மயானம் போலக் காட்சியளிக்கின்றது.

தமது வீடுகளைச் சென்று பார்த்துத் திரும்பிய அப் பகுதி வாசிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

மறவன்புலோ கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளைப் பார்க்கச் சென்ற பொது மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

அப்பகுதியில் உள்ள ஓலை வீடுகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாகவும் கல்வீடுகளின் கூரைப் பகுதிகள், கதவுகள், ஜன்னல்கள் அகற்றப்பட்டு கட்டடங்களில் சேதங்கள் ஏற்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் பயன்தரு மரங்கள் தறித்து எடுக்கப்பட்ட நிலையில் காணிகள் வெற்று நிலமாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வீடுகளில் கைவிட்டு வந்த தளபாடங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், நெல் மூடைகள், மின்பிடி உபகரணங்கள் உட்பட பொருள்கள் அனைத்தும் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-117]

# மந்திகைக்கு 24 மணிநேர மின்சாரம்

வடமராட்சி, மார்ச் 26

மந்திகைப் பகுதிக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென பெரிய மின்மாற்றி ஒன்று மந்திகை அரசினர் வைத்தியசாலை வளவில் அமைக்கப்பட்டு அதன் மூலம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கும் அதன் சுற்றாடல் பகுதிக்கும் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

24 மணி நேர மின்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்கிருந்த இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 250 கே. வி. வலுகொண்ட ஜெனரேட்டர் வேலணைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ஐ-173)

# 28 குடும்பங்களுக்கு விசேட நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச்26

அண்மைக்கால அசாதாரண சூழ்நிலை காரணமாக சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள 28 குடும்பங்களுக்கு விசேட நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் குடும்பங்களில் சாவகச்சேரி பிரதேச செயலரால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இவர்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். [ஐ-9]


**நல்லூர் ஐக்கிய விளையாட்டுக் கழகம்**

நடத்தும்

9பேர் கொண்ட 15 பந்து பரிமாற்றங்களை உடைய

**மென்பந்து கிறிக்கெற் சுற்றுப்போட்டி**

விண்ணப்ப முடிவு திகதி: 13-04-2000

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:

லயன்ஸ் (ஸ்ரான்லி கல்லூரி முன்பாக).

சுதாஸ் கிறீம் ஹவுஸ் நல்லூர்.

(74776) போட்டிக்குழு.


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 12 — 10 — 1935

ஆண்டவன் அடியில் 01 — 04 — 1994

### அமரர் மு. இராசரத்தினம்

(வலி. கிழக்கு பிரதேச சபை முன்னாள் செயலாளர், நீர்வேலி)

திதி: 26 - 03 - 2000

ஆறாண்டு சென்றதையா
ஆறியதா எம் துயர்?
இன்று அரும்பிய துயர்
போலவே துடிக்கிறோம் ஐயா!
நூறாண்டு சென்றாலும் உம் நினைவு
எம் நெஞ்சை விட்டு அறுத்திட முடியுமா ஐயா!

சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: ந. இராசேந்திரன்
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

(74658)

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு: 20 — 02 — 1947

இறப்பு: 26 — 03 — 1999

### திருமதி அனற்றா இம்மனுவேல்

எம் உள்ளமதில் நிறைந்திருக்கும்
அன்புத் தெய்வமே!

அன்பு மனைவியாய் அருமை அன்னையாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உயரமாய்
கருணை காட்டினீர்.
பாதியிலே எமையெல்லாம் பரிதவிக்க விட்டு
பக்குவமாய் பரமன்தாள் ஏகினீர்!
பன்னிரண்டு மாதங்கள் பறந்து விட்டன — உம்
ஓராண்டு பூர்த்தியதில் ஒருமனமாய் நாங்கள்
இறைஞ்சுகின்றோம் இறையருளினை.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 26-03-2000 காலை 11.30 மணிக்கு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் நினைவுடன்
கணவன், பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(74752)

## சமய சந்நிதிகளில்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 26

புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவை சித்தி விநாயகர் ஆலய வசந்த மண்டப கும்பாபிஷேக நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணியிலிருந்து 7.00 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகின.

இன்று ஞாயிறு சாந்திக் கிரியைகள், யாக பூசைகள் என்பன இடம்பெறவுள்ளன. நாளை அதிகாலை பஞ்சமுக அர்ச்சனையும் தொடர்ந்து கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

மாலை 4-00 மணிக்கு விசேட மேளக்கச்சேரி சகிதம் சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (க-133)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 26


காரைநகர் அருள்மிகு ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீ ஐயனார் திருக்கோயிலில் வருடாந்தப் பங்குனிப் பெரும் பொங்கல் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கல்வயல் — நுணாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ ஐயனார் திருக்கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு விசேட சங்காபிஷேகமும் பூசையும் மறுநாள் திருக்கல்யாணத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. [ஐ-30]

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சண்முகம் கந்தசாமி

தோற்றம் 17 - 05 - 1937

மறைவு 22 - 02 - 2000

காலத்தால் அழியாத எங்கள் பாசதீபமே ஐயா! உங்கள் இலட்சியத்தையும் கனவுகளையும் நிறைவேற்றுவோம் என்று உறுதியோடு உங்களின் பிள்ளைகள் முன்னேற்றம் அடைந்து வரும் வேளையில் உங்களைக் காலன் கவர்ந்துவிட்டான். உங்களின் பிரிவால் கலங்கி நிற்கும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

கெருடாவில், தொண்டமானாறு.

(74766)

# வவுனியாவில் பீதியைக் கிளப்பியுள்ள வெள்ளை வான், மர்மக் கைதுகள்!

வவுனியாப் பகுதியில் மீண்டும் கைதுகளும் ஆள்கள் காணாமற் போகும் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரும் பொலீஸாரின் புலனாய்வுப் பிரிவினரும் மற்றும் கொழும்பிலிருந்து வரும் விசேட புலனாய்வுத்துறையினர், தமிழ்க் கட்சிகள் என்பன சகட்டுமேனிக்குக் கண்டவர்களையெல்லாம் கண்டபடி கைது செய்து கொண்டு போக மக்களோ யாரால், எங்கே, எப்போது, எப்படிக் கைது செய்யப்பட்டார்கள் என்பது தெரியாமல் தடுமாறிப் போயிருக்கிறார்கள். தமது உறவினரொருவர் கைது செய்யப்பட்டால் யாரிடம் போய் முறையிடுவதென்று தெரியாமல் தடுமாறிப் போயிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் அண்மைக் காலத்தில் வெள்ளை வானொன்றின் நடமாட்டமும் அதில் ஆயுதபாணிகளாக வரும் ஆண், பெண் ஆயுததாரிகள் இளைஞர்களை இரவோடிரவாக அள்ளிச் செல்லும் சம்பவங்களும் அதிகரித்து உள்ளன. இதனால் மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வு தலை தூக்கியுள்ளது. கடந்த 14 ஆம் திகதி வவுனியா நகரை வலம் வந்த இந்த வெள்ளைவானில் வந்தோர் வேப்பங்குளம், நெளுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம் ஆகிய பகுதிகளில் இரண்டு பெண்கள் உட்பட நாலு பேரைக் கைது செய்து கொண்டு சென்றனர். இதனால் வவுனியா நகரப் பகுதியில் பதற்றம் அதிகரித்துக் காணப்பட்டது. இதிலும் வேப்பங்குளம் பகுதியில் உள்ள காளிமுத்து கோவிந்தராசா என்பவரைக் கைது செய்வதற்காக அவரது வீட்டிற்கு இந்த வான் கொண்டு செல்லப்பட்டபோது வானின் இலக்கத்தகடு மறைக்கப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறான சம்பவங்கள் வவுனியா மக்களை வெளியே நடமாட மட்டுமல்ல வீட்டிலேயே முடங்கிக் கிடக்கவும் அச்சப்படுத்தியுள்ளது.

இவ்வாறு வெள்ளை வானில் வந்து கைது செய்யப்பட்டது தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் செயலணியின் அதிகாரியான ஸ்ரீதரனிடமும் முறையிடப்பட்டது. அவர் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அப்படி எவரையும் தாம் கைது செய்யவில்லையென அவர்கள் மறுத்துள்ளனர்.

ஆனால் அவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் அடுத்தடுத்த நாள்களில் வவுனியா குடியிருப்பு என்ற பகுதியில் முகாமிட்டுள்ள படையினரால் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். இந்நிலையில் வெள்ளை வான், பற்றுச்சீட்டில்லாத கைது என்பன மக்களைப் பயப்பீதிக்குள்ளாக்கியிருக்கிறது. இதனால் வீட்டை விட்டு வெளியே சென்ற ஒருவன் குறிப்பிட்ட நேரத்திற்கு வீடு திரும்பாவிடில் அவரைத்தேடி அவரது உறவினர்கள் அலையத் தொடங்கி விடுகின்றனர்.

தற்போது வவுனியா மனித உரிமைகள் செயலணியின் அதிகாரியாக ஸ்ரீதரன் நியமிக்கப்பட்ட பின் காணாமற் போனவர்கள், கைதுசெய்யப்பட்டோரின் உறவினர்கள் அனைவரும் அங்கே படை எடுத்துக்கொண்டு சென்றுவிடுகின்றனர். அவ்வாறு முறைப்பாடு செய்வோர்பற்றி உடனடியாக விசாரிக்கப்பட்டு உறவினர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டுவருகின்றது.

எனினும் மக்கள் மத்தியில் கைதுகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள அச்சம் மனித உரிமை ஆணைக்குழுவினருக்குத் தேவையற்ற அலைச்சல்களையும் கொடுத்து விடுகிறது. வீட்டிலிருந்து கோபித்துக் கொண்டு போனவர் சொல்லாமல் கொள்ளாமல் உறவினர் வீடுகளில் தங்கி விடுவோர் பற்றியெல்லாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டு அவர்களுக்குத் தேவையற்ற அலைச்சல்களைக் கொடுத்து விடும் சம்பவங்களும் அன்றாடம் நடைபெற்றுத்தான் வருகின்றன.

கடந்த 20 ஆம் திகதி நெளுக்குளத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வகுமார் என்ற 31 வயது இளைஞர் காணாமற் போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு செய்யப்பட்டது. வழமையாக காலை 7 மணிக்குச் சந்தைக்கு மரக்கறிவாங்கச் செல்லும் இந்த இளைஞர் காலை 8 மணிக்கே வீடு திரும்பி விடுவாராம். ஆனால் அன்றைய தினம் 10 மணிவரை வீடுதிரும்பவில்லையென கண்ணீரும் கம்பலையுமாக இளைஞரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டார். ஆணைக்குழு அதிகாரியான ஸ்ரீதரனும் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். ஆனால் எவரும் தாம் குறிப்பிட்ட இளைஞனைக் கைது செய்யவில்லையென மறுத்துவிட்டனர். தாயாரும் அழுது புலம்பியபடி வீடு திரும்பினார். காணவில்லை என்று முறைப்பாடு செய்த இளைஞர் வீட்டிலே ஹாயாக இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்திருக்கிறார். விசாரித்துப் பார்த்ததில் அவரது மோட்டார் சைக்கிள் காற்றுப் போனதால் அதனை ஓட்டிக் கொண்டுவர தாமதமாகிவிட்டது என்பது தெரியவந்துள்ளது. இச்சம்பவம் வவுனியாவில் கைதுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் அச்சத்தைத் தெளிவுபடுத்திக் காட்டுகிறது. வீட்டிலே இருந்து புறப்பட்ட ஒருவர் குறித்த நேரத்துக்கு வீடு திரும்பாவிடில் அவர் எவராலாவது கைது செய்யப்பட்டிருப்பார் என்று நம்பக்கூடிய அளவிற்கு அச்ச உணர்வை அண்மைக்கால கைதுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது இத்தகைய கைதுகளைத் தவிர்க்கும்படியும் வெள்ளை வான் கைதுகள் போன்ற மக்களை அச்சப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் படை அதிகாரிகளிடம் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியான ஸ்ரீதரனும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர். ஆயினும் கைதுகளும் காணாமற் போதலும் குறைந்தபாடாக இல்லை. ★

**வவுனியா வலம்**
**-ரா.இளவரசன்-**

## எதிரொலி...
**- இடியன் -**

- தமிழர் விடுதலைக்கூட்டணியினரைச் சந்திப்பதற்கு ஒப்புக்கொண்ட ஜனாதிபதி ஐந்து மணி நேரத்தாமதத்தின் பின்னரே அவர்களைச்சந்தித்தார்.
- ★ அரசாங்க மதம் பௌத்த மதமானாலும் அரசுத் தலைவி பின் ற்றும் மதம் தா ''மதம்'' தான்!
- வவுனியாவில் வெள்ளை வான்காரணமாகப் பொதுமக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்!
- ★ வான் வெள்ளை என்றாலும் அதன் வெளிச்சம் சிவப்பாக இருக்கிறதோ?
- தமிழ்க் கல்வி இன்று மிக மோசமான நிலைக்கு வந்துள்ளதாகக் கவலைப்படுகிறார் சிவத்தமிழ்ச் செல்வி!
- ★ பல இடங்களிலே தமிழ் இப்போது படிப்பிக்கப் படாமல்படிப்'' பிய்க்'' கப்படுவது தான் காரணமோ?
- பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்படுபவர்கள் பிணையில் வெளிவருவதைத் தடுக்கும் சட்டமூலம் தயாராகின்றதாம்;
- ★ பிணை மறுப்பு என்பது காலப்போக்கில் ''உயிர் பறிப்பு'' என்ற நிலைக்கு இட்டுச்செல்லாதோ?
- தம் பிள்ளைகளை அரச படையிற் சேருமாறு பெற்றோர் வற்புறுத்திக் கூறவேண்டுமாம்!
- ★ அதாவது ''போரே நீ போ!'' என்று சொல்லாமல் ''போருக்கு நீபோ'' என்று சொல்ல வேண்டுமாம்!
- தற்கொலைக் குண்டுதாரி எனத் தாம் சந்தேகங் கொண்ட பெண்ணின் உடைகளைக் களையுமாறு விமானப் படையினர் உத்தரவிட்டனராம்; வீதியில் நின்ற அப்பெண் அப்படிச் செய்யவேண்டி இருந்ததாம்!
- ★ நடைமுறையிலுள்ள சில சட்டங்களின்படி படையினர் மற்றவர்களுக்கு இல்லாத இத்தகைய பல ''உரி'' மைகளை அனுபவிக்கின்றனர்!
- பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள பொ. ஐ. முன்னணியின் குழுவிலும் சரி, ஐ.தே.க. வின் குழுவிலும் சரி, ஒரு தமிழராவது இடம்பெறவில்லை!
- ★ அப்படியானால், கொண்டுவரப்படும் தீர்வுத் திட்டம், தமிழ் மக்களைத் ''தீர்த்துக்'' கட்டும் திட்டமாக இருக்குமோ என்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!
- உலகப் பிரசித்தி பெற்ற தாஜ் மஹாலை ஜனாதிபதி கிளின்ரன் பார்வையிட்டாராம்!
- ★ வெண்ணிலவில் ஒளி வீசிய அந்த மாளிகையைப் பார்த்தபோது, வெள்ளை மாளிகையின் ''உலகப் பிரசித்தி'' பெற்ற சில நிகழ்ச்சிகளையும் நினைத்திருப்பாரோ?

# அரிய நிதர்சனங்கள் மேடையில் தரிசனம்

பேசத் துணியாத ஓர் அவலத்தை' 'அக்கினிப் பெருமூச்சு' என்னும் நாடகம் அரங்கில் முன்வைக்கிறது என்று பலரும் சொல்வது அடிக்கடி காதில் விழுகிறது. ஆனால் இந்த நாடகம் நம் முன் நடத்திக்காட்டுவது அப்படி ஒன்றும் பேசப்படமுடியாத பொருள் அல்ல; வெளியரங்கத்தில் பேசப்படாவிட்டாலும் அந்தரங்கத்திலே அவ்வப்போது 'பறையப்படுவது' தான். அதுவும் அடிக்கடி பறையப்படுவது. உண்மை என்னவென்றால் அது காட்டும் மெய்யுண்மைகளை நேரே உற்றுப் பார்ப்பதற்கு எங்கள் கண்கள் கூசுகின்றன; உள்ளம் உறுத்துகின்றது.

'அந்தத் துளாவாரம் எல்லாம் எங்களுக்கு ஏன்? நாங்கள் எங்கள் பாட்டிலே இருப்பம்' என்ற மனப்பான்மை தான் எங்களுக்குக் கவசமாய் உதவுகிறது. இதனால் 'இப்படிப்பட்ட ஆக்கங்கள் கலை அல்ல; கருத்துகள் துருத்திக் கொண்டு நிற்கின்றன; அதனால் அழகியல் நிலையில் அவை நிறைவு தருவனவாயில்லை' இவ்வாறெல்லாம் விமர்சனக்குரல்கள் கிளம்பலாம்.

கண்களை இறுக மூடிக் கொண்டால் நம் அக உலகங்கள் இருண்டுவிடுமே தவிர புறவுலகின் மெய்யுண்மைகள் இல்லாமற் போய்விடமாட்டா. ஆகையினால் நமக்குச் சங்கடம் தரும் அவலங்களைப்பார்க்க மறுத்து அழகியற் கோட்பாடுகளிடையே போய் ஒளித்துக்கொள்வது நிரந்தரமான தீர்வுகளைத் தரமாட்டா.

'அக்கினிப் பெருமூச்சு' என்பது என்ன? அது ஒரு நாடகம்; ஏற்கனவே சில மேடைகளில் ஏறிவிட்ட அரங்கச் செயல் வீச்சு. ஊன்றி நோக்குவதற்கு அரிய சில நிதர்சனங்களை மேடைத் தரிசனமாக்கும் ஒரு முயற்சி; கலைமயமான சில உத்திவித்தைகளின் கதம்பமல்ல இது. நுண்ணியமான உள்ளுணர்வின் உயிரியக்கமாக இதனை எடுத்து நோக்கவேண்டும்.

ஏன்? பல காரணங்கள் உண்டு. முக்கியமான இரண்டொன்றினை மட்டும் இங்கு சுட்டிக்காட்டுவோம்.

ஒரு பழங்கதை — சாவித்திரி — சத்தியவான் — யமனுடன் வாதாடும் சாவித்திரி, தன் கணவனின் உயிரை மட்டும் அல்ல. சந்தான பாக்கியத்தையும் வரமாகப் பெற்று விடுகிறாள் தன் புத்தி சாதுரியத்தினால்! அந்த உபகதையின் நடுக்கரு, மரணம் பற்றிய அச்சமும் திண்டாட்டமுந்தான்.

**அக்கினிப் பெருமூச்சு ஆற்றுகை விமர்சனம்**

**இ. முருகையன்**

இங்கு, மேடையிலே தே. தேவானந்த் காட்டுவதும் யமன்களைத் தேடியறிய முயலும் தாய்மாரின் பரிதாபம் தான். காணாமற்போன பிள்ளையை மறுபடியும் காண்பதற்கு ஒரு தாய் எந்தப் பெரிய விலையையும் கொடுக்கத் தயாராய் உள்ளாள். தன் உடல், உயிர், உள்ளம் உட்பட, எங்கோ ஒரு நாட்டில் வழங்கும் நாடோடிப் பழங்கதையை எடுத்து, நாடக மேடையில் ஓர் அவலகீதமாய் உயிரூட்டிக் காட்டுகின்றார் நெறியாளர். ஓர் உன்னதமான இசைக் கோலம் போல பல்லவி, அனுபல்லவி, சரணம் யாவும் அங்க சம்பூரணமாய் வந்து பொருந்திய கூட்டிசைக் கூத்துப் போல,

**கலைச் சுடர்**

புதிய பல அர்த்த சஞ்சாரங்களுடன், அந்த நாடோடிக் கதை மெருகேறி மிளிர்கிறது. அதனை மேடையிலே நேரிற் கண்டு, கேட்டு உற்று உணர வேண்டும். வெறும் விவரிப்புகளால், அதை உணர்த்தி விட முடியாது.

'அக்கினிப் பெருமூச்சில்' வரும் இழைகள் பலவற்றுள் இது ஒன்று — இப்படி இன்னும் பல அருமையான உத்திகள்; ஊமங்கள்; [பேசாப் பாவனைகள்] அதிர்வு வளம் செறிந்த கவிதை வரிகள்; எதிர்க்குறிப்பின் பொழிப்புப் பொதிந்த சொல்லாடல்கள்; வரலாற்றுச் செய்திகளைச் சுட்டி உணர்த்தும் மொழிவுகள்; சைகைகள், சமிக்ஞைகள், இவை அனைத்தும் நிரம்பிய அரங்கச் செயலாக்கம் 'அக்கினிப் பெருமூச்சு'.

அதன் வீச்சும் 'வெக்கையும்' உணர்திறன் வாய்ந்த எவரையும் உலுப்பாமல் விடமாட்டா. அந்தக் கலைப் படைப்பின் வலிமை தான், அதன் உயிர்மையம்– 'வலிமை ஓர் அழகு' என்றார் பாரதியார். அவர் சொன்னவலிமையின் அழகை, அல்லது அழ

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கீத, நடன ஆசிரியர் தெரிவுக்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
1998 ஆம் ஆண்டு மே மாதம் வர்த்தமானி மூலம் கோரப்பட்ட சங்கீத, நடன ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினரின் விவரம் கடந்த வெள்ளியன்று உதயனில் வெளியாகியது. எஞ்சியோரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

செல்வி வி. சிவப்பிரியா (84/1/ ஏ. மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை), செல்வி பி. ஜெயநந்தினி (516, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்), செல்வி பி. தர்சிலா (இல. 22 (8), பலாலி வீதி, யாழ்ப்பாணம்), செல்வி கே. கலா ஜோதி(வேலணை, களபூமி), செல்வி கே. தேவலோஜனி (இலகடி, காரைநகர்), திருமதி ஆர். றூபினி (இல. 12, பல்கலைக்கழக லேன், திருநெல்வேலி தெற்கு), செல்வி என். நளாயினி (219 பருத்தித்துறை வீதி, நல்லூர்), செல்வி ரி. நந்தினி (16/2, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம்), செல்வி ரி. தயாளினி (16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), திருமதி எஸ். நிரஞ்சனி (அம்பாள் கபே, கொறவப்பொத்தன வீதி, வவுனியா) செல்வி எஸ். சுசீலா (கிழவி தோட்டம், கரவெட்டி மத்தி).

செல்வி எஸ்.ஜே.ஜே. தவநஞ்சினி [நுணாவில் மேற்கு, சேச் லேன், சாவகச்சேரி], செல்வி என். கிருபாசக்தி [நல்வயல், சாவகச்சேரி], செல்வி ஆர். லீலாவதி [பறாளை வீதி, சுழிபுரம்], செல்வி பி. ஜெயகௌரி [கட்டுவன் தெல்லிப்பழை], செல்வி எஸ். தேவகி [58, லோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணை], செல்வி ஆர். யசோதரா [63/3, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்], வி. சுரேஷ் [கொண்டுவில் லேன், சாவகச்சேரி],

செல்வி எஸ். சுதாமதி (106, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு), செல்வி எஸ். ஜெயகேந்தினி (இல — 24, கனகசபை வீதி, மானிப்பாய்). செல்வி சே. கல்யாணி (சம்பியன் லேன், நாயன்மார்க்கட்டு), செல்வி ரி. பிறேமலதா (மீசாலை மேற்கு), செல்வி எஸ். மலர்விழி (ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் மேற்கு), திருமதி எம். அருட்சோதி (மீசாலை கிழக்கு), செல்வி கே. யோகராணி (திக்கரை, களபூமி, காரைநகர்).

செல்வி என். நிர்மலா (193/4, பிறவுண் வீதி, வண்ணார்பண்ணை), செல்வி எஸ்.வத்சலா (சோர்னாவடலி வீதி, கொக்குவில் மேற்கு), திருமதி பி. சிவாஜினி (டச்சு வீதி, மூளாய்), செல்வி என். தயாளின் (381, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்), திருமதி ஜி. அனிந்திதை (கலைமாணி லேன், கட்டைப்பிராய்), செல்வி ரி. சுனிதா (கோணாவளை, கெருடாவில் வடக்கு, தொண்டமானாறு), செல்வி என். கேதீஸ்வரி (பலாலி கள்ளிபளை, மாவட்டபுரம்), செல்வி எஸ். சுகன்யா (நாகம்மாள் கோவிலடி, அராலி மத்தி), செல்வி எஸ். வானதி (நாரந்தனை வடக்கு). செல்வி என். கமலவாணி (மாவத்தை லேன், அராலி தெற்கு), செல்வி ரி. விக்னேஸ்வரி (பிள்ளையார் கோவிலடி, மூளாய்),

செல்வி ஏ. தாரணி (புதுத்தோட்டம் தெல்லிப்பழை), பி. பகீரதன்(வரணி வடக்கு), செல்வி பி. தாமரைச்செல்வி (தம்பசிட்டி, புலோலி மேற்கு), செல்வி எஸ். பத்மா (அச்சுவேலி தெற்கு), செல்வி கே. ராகினி (மாவிட்டபுரம்), திருமதி ஏ. ஞானேஸ்வரி, திருமதி ஏ. உஷா(மே/பா கே. சிவபாலன், வாட் இல— 7 புதுக்குடியிருப்பு), செல்வி ஜி. சுபத்திராதேவி (77, பள்ளி நகர், வவுனிக்குளம்), செல்வி எஸ். அமுதறசலின் (அலம்பில் முல்லைத்திவு), செல்வி ஜி. மதுராதேவி (77, பள்ளி நகர், வவுனிக்குளம்), செல்வி எஸ். இந்திராதேவி (விடுதி இல—5, குமுளமுனை, முல்லைத்தீவு), செல்வி ஆர். கிருஷ்ணவேணி (விடுதி இல—8, புதுக்குடியிருப்பு), செல்வி பி.லோஜினி (சுரேஷ்குடியிருப்பு கைவேலி).

செல்வி ஜே. பாமினி (உபதபால் அலுவலகம், நட்டான் கண்டல், மாங்குளம்), செல்வி எஸ். ஜெயநதி மாங்குளம் மகா. வித்.), செல்வி ஆர். லலிதாம்பிகை (விடுதி இல—3, முள்ளியவளை), செல்வி பி. தயாநிதி (விடுதி இல—3, செங்குந்தா தெரு, முள்ளியவளை), திருமதி ரி. நகுலேஸ்வரி (இல—26, பள்ளிநகர், வவுனிக்குளம்), செல்வி பி.விமலாதேவி (விடுதி இல—6, குமுளமுனை), செல்வி எஸ். சோதீஸ்வரி (இல. 154, பிரியா பண்டிவிரிச்சான், மடுதேவாலயம்), செல்வி எஸ். யோகேஸ்வரி (இல — 154, பிரியா பண்டிவிரிச்சான், மடுதேவாலயம்). செல்வி எஸ். மகேஸ்வரி(இல—154. பிரியா பண்டிவிரிச்சான், மடுதேவாலயம்), திருமதி எஸ். திருமகள் (முருங்கன் பிட்டி முருங்கன்). ஏ. கருணாகரன் (பாளயங் கோட்டை, நானாட்டான்)

செல்வி அசம்ரா அருந்ததி (பதிவகண்டை முருங்கன்). செல்வி எம். கலாவதி (நானாட்டான்), செல்வி கே. நீதிமதி (178/5, தோணிக்கல் வவுனியா), செல்வி கே. மேனகா (187/ஏ, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா), திருமதி எஸ். லதா (இல—49, கோவில் வீதி, குருமன்காடு. வவுனியா), திருமதி கே. நளினி (தபாற் கந்தோர், வவுனியா)

## நடனம்

செல்வி ரி. ஜெயந்தினி (34/1, கலைமகள் லேன் அரியாலை மேற்கு), திருமதி எம். திலகராணி (நெல்லியடி வடக்கு வதிரி), செல்வி எஸ். சாந்தி (துனுக்கை மேற்கு. கரவெட்டி), செல்வி ஆர். சசிகலா (அராலி மத்தி), திருமதி என். நித்தியானந்தன் (மீசாலை மேற்கு), செல்வி கே. குகநேசன் (உடுவில் மேற்கு), செல்வி எல். பிறேமசாலினி (பன்னாலை வீதி. தெல்லிப்பழை).

செல்வி எம். யசோதா (மருதடி, வலந்தலை, காரைநகர்), செல்வி பி. வசந்தி (இல — 80, யாழ் வீதி, யாழ்ப்பாணம்), செல்வி ஏ. கோல்ட்மியர் [உரும்பிராய் கிழக்கு), திருமதி எஸ். விமலகுமாரி (மீசாலை மேற்கு), செல்வி ஆர். சுபாதினி (மீசாலை மேற்கு), செல்வி கே. நிலானி (இல. 284, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்).

செல்வி எஸ்.சத்தியா (இல. 187/2), கோயில் வீதி. நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்), செல்வி எஸ். யோகேஸ்வரி (அளவெட்டி), திருமதி எஸ். சுபாஷினி (கொக்குவில்), செல்வி பி. திருமகள் (மாப்பியன்வீதி, சுதுமலைதெற்கு), திருமதி பி. மலர்விழி (வறுதலை விளான் தெல்லிப் பழை), செல்வி எம். பிறேமநளினி (பன்னாலை வீதி. தெல்லிப்பழை), திருமதி எஸ். வீரசிங்கம் (கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்), செல்வி என். அஞ்சலா (மே/பா அதிபர், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), செல்வி கே. கவிதா (ஆடியன்பிட்டி வீதி, சாவகச்சேரி), செல்வி எஸ். மாதினி (இணுவில் மேற்கு, மானிப்பாய்), செல்வி எஸ். அனுஷியா (பூதவராயர் கோயிலடி, அன்னாலை தெற்கு கரவெட்டி), செல்வி எம். மீனா, செல்வி வி. ஸ்ரீ விக்னேஸ்வரி, செல்வி எஸ். அனந்தஜோதி (75, அம்மன் வீதி, கந்தர் மடம்), திருமதி கே.சுபத்திரா (சண்டிலிப்பாய் வடக்கு). செல்வி ஏ. விஜயராஜினி [27/1. 3ஆம் குறுக்குத்தெரு, பாசையூர்], செல்வி ரி. பத்மசாந்தி[சண்முகன் வீதி, சாவகச்சேரி], திருமதி என். நந்தரூபி [மீசாலை மேற்கு]. செல்வி எஸ். சத்யகௌரி [பேரம்பலம் வீதி, பெரியமாவடி, சாவகச்சேரி], செல்வி ரி. ஜாளினி[கல்வயல், சாவகச்சேரி], செல்வி ஆர். ஆனந்தி [39/5, பிரம்படி லேன், கொக்குவில்], செல்வி எஸ். பவானி[83, சென் அன்ரனீஸ் சேச்லேன், யாழ்ப்பாணம்]. செல்வி எஸ் சுசீலா [மாலியாவதை, சங்கானை],

செல்வி. கே. சபாநாதன் (அல்வாய் தெற்கு) செல்வி. ரி. சேதீஸ்வரி (காளி கோவிலடி, வட்டு தெற்கு) திருமதி. எஸ். இராஜாம்பிகை(துனுக்காய் வீதி, மல்லாவி) செல்வி. எஸ். பிறேமா (முல்லை வீதி, விசுவமடு) செல்வி. ஆர். அச்சுதா (தண்ணீரூற்று, முள்ளியவளை) செல்வி. கே. திலகராணி (விடுதி.இல2. முள்ளியவளை) செல்வி. கே. சண்முகப்பிரியா (குருமன்காடு, மன்னார் வீதி, வவுனியா)

செல்வி டபிள்யு. சூரியயாழினி (பிள்ளையார் கோயிலடி, தற்கிழுவைக்குளம், வவுனியா), திருமதி எஸ். கலாநாதன் (24, றோகினி வீதி, கொழும்பு, 6), செல்வி கே, சறோஜினி (இல. 130/ஏ, கோட்சிட் வீதி, வவுனியா), செல்வி பி.பிரிந்தினி(இல.29, கறப்பங்காடு, வவுனியா), செல்வி எஸ். விமலா (இல. 141, லக்ஷபான வீதி, 3 ஆவது லேன், தோணிக்கல் வவுனியா)

செல்வி. வி. மாதவி (குருமன்காடு, வவுனியா), செல்வி. எஸ். ஸ்ரீ மோகனா (பட்டகாடு, வவுனியா), செல்வி. எஸ். றஜனி (இல.131D—10 உருத்திரபுரம், கிளிநொச்சி) செல்வி. ரி. கேமலதா (கரியாலை, நாகபடுவான், பூநகரி)

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.


## R G L Beauty Parlour

சிகையலங்காரம் 10 வகுப்புக்கள் மட்டும்
100 Modern

மணமகள் அலங்காரங்கள், ஒப்பனைக்கலை ( Facial ) மருதாணி, மயிர் சுருட்டுதல், Dye, Haircut, Bleach, இமைகளை வடிவமைத்தல், கேக் ஐசிங் (பொண்டன்) Run out தையல், பூவேலை மற்றும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இந்தியாவில் பயிற்சிபெற்ற ஆசிரியரால்
குறுகிய காலத்தில் கற்றுக் கொடுக்கப்படும்.

6 ஆவது பிரிவு 02 - 04 - 2000 மாலை 3.00 மணி
7 ஆவது பிரிவு 12 - 04 - 2000 மாலை 3.00 மணி
8 ஆவது பிரிவு 20 - 04 - 2000 மாலை 3.00 மணி

★ முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

55, சிவன் புது வீதி, நல்லூர்.

[74821]

## முதலாவது
## பிறந்ததின வாழ்த்துக்கள்!

TRIPLETS



A. SOURAV
A. TERANCIA
A. SOURAVPHAN

சே. ஆனந்தராஜா – பியற்றீசியா

தம்பதிகளின் செல்வங்கள் தங்கள் முதலாவது பிறந்த நாளை இல. 42/9, இராஜேந்திரா வீதியில் உள்ள தங்கள் இல்லத்தில் இன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அம்மா, அப்பா, தொட்டப்பாமார், தொட்டம்மாமார் மற்றும் அனைத்து உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குழந்தை இயேசு அருளாலும் இறைவன் பாதம் சென்ற ரெரன்சியா அன்ரா ஆசியாலும்' பல்கலையும் கற்று கல்வியிற் சிறந்து பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

S. ஆனந்தராஜா
(D. சேனாதிராஜா அன்சன்ஸ்)
உரிமையாளர்

(74829)


## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26
குருநகர் பிரான்ஸ் கல்விக் கழகம் சிறுவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை நாளை திங்கட்கிழமை நடத்தவுள்ளது.

பிற்பகல்4 மணிக்கு குருநகர் மவுண்கார்மல் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் யாழ். அகலொளி நிலைய இயக்குநர் அருட்திரு. எஸ். என். இராசநாயகம் கருத்துரை வழங்குவார்.

(க-15)

## யாழ். இந்து., மகாஜனா சதுரங்கத்தில் முன்னிலை

### இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26
ஹற்றன் நஷனல் வங்கிஆதரவில் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய 8 ஆவது சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்புவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கடந்த 14 ஆம். 15 ஆம் திகதிகளில் நடந்து முடிந்த இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் பெரும்பாலான முதல் இடங்கள் யாழ். இந்துவின் அணிகளுக்கு அல்லது வீரர்களுக்குக் கிடைத்துள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் ஏழாவது தடவையும் யாழ். இந்துக் கல்லூரி முதலிடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது,

அதே போன்று இம்முறையும் பெண்கள் பிரிவில் மகாஜனாக் கல்லூரி முன்னிலை பெற்றுள்ளது.

பாடசாலை அணிகளுக்கு இடையில் நடந்து முடிந்த போட்டிகளின் முடிவுகளின் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளின் விவரம் முறையே வருமாறு:-

**16 வயது மேல்— ஆண்**
★ யாழ். இந்து.
★ கரவெட்டி விக்னேஸ்வரா.

**16 வயது மேல்—பெண்**
★ மகாஜனாக் கல்லூரி.
★ யூனியன் கல்லூரி.

**16 வயது கீழ் — ஆண்**
★ யாழ். இந்து.
★ மகாஜனா.

**16 வயதுகீழ் — பெண்**
★ மகாஜனா.
★ கொக்குவில் இந்து

பாடசாலை மாணவர்களிடையேயான தனிநபர் ஆட்டங்களில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றோர் விவரம் முறையே வருமாறு:-

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன்

## பேரணி வெளிப்படுத்தியவை

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற சமாதானப் பேரணி இன்றைய நிலையில் இப்பிரதேச மக்களின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றது. தமக்குச் சமாதானம் தேவை என்பதனை அவர்கள் உணர்த்தி உள்ளனர்.

நேற்றைய சமாதானப் பேரணிக்கு ஒரு சிறப்பு உண்டு. அரசியல் பின்னணி எதுவும் இல்லாமல் மக்களால் மட்டுமே நடத்தப்பட்ட பேரணி இது. ஆதரவு திரட்டுதல், வாகனங்களில் ஏற்றிச்செல்லுதல் ஆகியன சிறிதும் இல்லாமல் அரசியல் சாயமே இல்லாமல் மக்கள் தாமாகப் பேரணியில் பங்குபற்றினர்.

போரை உடனடியாக நிறுத்தி, சமாதானப் பேச்சைத் தாமதமின்றி நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரியே யாழ்ப்பாண மக்கள் இந்தப் பேரணியை நடத்தினார்கள்.

அவசரகாலச் சட்டமும், ஊரடங்குச் சட்டமும் திணிக்கப்பட்டு, சுயகௌரவம் களையப்பட்ட நிலையில், பாதுகாப்பற்ற நிலையில், நிம்மதியான வாழ்வற்ற நிலையில் குடாநாட்டு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல வகையான இழப்புகள், அவலங்களுடன் அழிப்புகள், உரிமை மறுப்புகளையும் எதிர்நோக்கியவாறு அவர்கள் வாழ்கிறார்கள்.

ஆகையால், சமாதானம் விரைந்து வர வேண்டும் என்று அவர்கள் விரும்புவதில் புதினம் எதுவுமில்லை. போரை உடனடியாக நிறுத்தி, பேச்சுவார்த்தைகளை தாமதமின்றி ஆரம்பிக்குமாறு அவர்கள் கோருவது அதனால் தான்.

நேற்றைய பேரணி மூலம் அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் ஒன்றுள்ளது. சமாதானப் பேச்சுக்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு மட்டுமல்ல. தமிழ் மக்களின் நிலைப்பாடும் அதுவே என்பது வெறும் எழுத்திலன்றி பேரணி மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்குக் காரணம் இல்லாமலில்லை. தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி சில தீர்வுகளை எட்டிய போதிலும் அவை அமுல் செய்யப்படவில்லை. அதனால் வெறும் இருதரப்புப் பேச்சுக்களில்தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

அத்தோடு, இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது அரைகுறைத் தீர்வையே அரசாங்கம் முன்வைக்கக் கூடும் எனவும் தமிழ் மக்கள் சந்தேகப்படுகிறார்கள். அதன் நிமித்தமும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அவசியம் எனக் கருதுகிறார்கள். மத்தியஸ்தம்

நீதியுடனான சமாதானமே தேவை. அதுவே நீடிக்கக் கூடியது. அதற்கான ஒரு தீர்வைக் காண்பதற்கு, கட்சி அரசியல் நலன்களை முன்னிறுத்தாத, மக்களுக்கு விசுவாசமான செயற்பாடுகள் அவசியம். பேரணியில் கலந்து கொண்ட மக்கள் அதனையும் வலியுறுத்தி உள்ளனர்.

மொத்தத்தில் இன்றைய சூழ்நிலையில் குடாநாட்டு மக்களின் எண்ணப்போக்கு எவ்வாறு உள்ளது; அவர்கள் எவற்றைஎதிர்பார்க்கின்றார்கள் என்பதனை நேற்றைய மக்கள் பேரணி—அரசியல் கலப்பில்லாத சுயேச்சையான பேரணி — அரசியல் கட்சிகளால் சாயம் பூசப்படாத பேரணி — பிரமாண்டமான பேரணி — மிக வெளிச்சமாக எடுத்துக் காட்டி உள்ளது.

# இந்தத் தவக்காலம் மனமாற்றத்தின் காலம்...!

யூபிலி ஆண்டில் முதலாவது தவக்காலத்தில் காலடி வைத்துள்ளாய். இது மனமாற்றத்தின் காலம் என அறிந்திருப்பாய். உன் கடந்த காலத் தவறுகளைப் பட்டியல் போட்டிருப்பாய். பாவ அறிக்கை செய்திருப்பாய். புதுவாழ்வு வாழ முடிவு செய்திருப்பாய். ஆனால், இக்காலம் நீ ஒருவரைச் சந்திக்கும் காலம் என உணர்ந்திருப்பாயா? இக்காலத்தில் அவரைச் சந்திப்பதுவே அடிப்படையானதுஎன அறிவாயா?

தவக்காலம் இயேசுவைச் சந்திக்கும் காலம். தந்தையாம் இறைவனின் விருப்பை நிறைவுசெய்ய சிலுவை மரணத்தை ஏற்க கல்வாரி மலையை நோக்கி நடத்த இயேசுவைச் சந்திக்கும்காலம் இது.

அவர் நடந்த பாதை மலர் பரப்பிய பஞ்சுமெத்தை போன்றதல்ல. மாறாக கரடு முரடான பாலைவனப் பயணம். யோர்தான் நதியில் திருமுழுக்கு அருளப்பரிடம் திருமுழுக்குப்,பெற்ற இயேசு தூய ஆவியால் பாலைவனத்துக்கு வழி நடத்தப்பட்டார். அங்கு இயேசு சோதனைக்கு உள்ளானார் (லூக் 4: 1-13). இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்படுவது புதுமையானது என எண்ணாதே!

முதுமையில் மகப்பேற்றைப் பெற்று ''உன் இனத்தை வான் மீன்கள் போல வளரச் செய்வோம்'' என்ற உறுதி பெற்றுபின் 'ஒரே மகனைப் பலியிடுக' எனப் பணிக்கப்பட்டபோது ஆபிரகாம் சோதனைக்கு உள்ளானார் (ஆதி, 21-22). அவர் சோதனையில் வெற்றி கண்டார். இந்த வகையில்தான் இயேசுவும் சோதனைக்கு உள்ளானார்.

இயேசுவுக்கும் சில உள்ளப் போராட்டங்கள் ஏற்பட்டன. தெளிவு இல்லாத இருள் சூழ்ந்த வேளை. இருள் ஆட்சி புரிந்த வேளை, திசைமாறிப் போவதற்கு அமைந்த ஒரு சந்தர்ப்பம். ஆனால் அவர் கல்லை அப்பமாக்கவில்லை: அதிகாரம்பெறும் வேட்கையில் தலை வணங்கவில்லை; சாதனை படைக்க குதிக்கவில்லை; விலைபோகவில்லை.

இறைவன் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்பவர்கள் நன்மை, தீமைகளை ஒரே அளவில் எதிர்கொள்வார்கள். இயேசு காட்டிய இவ்வழியில் செல்வனே நீயும் அழைக்கப்படுகிறாய். சோதனைகளில் இருந்து ஒடிவிடலாம் என நினைக்கின்றாயா? முனைப்போடு வாழும்போது முட்டி மோதி வரும் சோதனைகளைப் புரிந்து கொள்! பாதைகளிலே நீ சந்திக்கும் சோதனைகளில் என்ன பதில் காணப் போகின்றாய்? பதில் எந்த நூலிலும் இல்லை ஆனால் உன் மனப்பக்குவத்தில் உண்டு. உன் இயல்பான நாட்டத்தில், போக்கில் புதைந்துள்ளது பதில்.

இயேசுவே 'வாழும் வார்த்தை' சோதனையை வென்று பாதை அமைத்த 'வாழும் வார்த்தை' அவரே. வாழ்ந்து வழிகாட்டும் 'வாழும் வார்த்தை' இயேசுவை சந்திக்க, சிந்திக்க, செயற்படவே நீ இக்காலத்துக்குள் காலடி வைத்துள்ளாய்.

## தவக்காலச் சிந்தனை

### பத்தொன்பதாம் நாள்

இயேசு செய்த பாலைவனப் பயணம் இன்றும் உன் வாழ்க்கையில் தொடர் கதையாகின்றது. மறந்து விடாதே ''என் ஆற்றல், என் திறமை'' யென தன்னை இழந்து விடும்போது அதிகாரம், பதவியெனவரும் வேளையில் விலை போகும் போது நீ நீயாக வாழாமல் வேடம் போட முயலும் போது உன் வாழ்வில் தொடர்வது பாலைவன நிகழ்வுதான். ஆயினும் சோதனைகள் வரும் போது 'அப்பனே ஏன் இத்தனை சிக்கல்கள், சோதனைகள்? இவற்றையெல்லாம் சிக்குப் பிரித்துக் கொண்டே உன்னை நினைத்து வாழ்வதற்காக விட்டாயா? முனைப்புடன் பாதையில் முன்னேற,தெளிவு பெற நானே சிக்குப் பிரித்து, தெளிவு பெற வேண்டும் என எண்ணும் மனம் உனக்குள் வளர வேண்டும்.

எனவே, எங்கே போய் விட்டாய்? நீ எங்கு போனாலும் நிழல்போல் வருபவன் இறைவன். அவன் உன்னுடன் பயணம் செய்கின்றான் வாழ்வில் நீ சந்திக்கும் சோதனையில் நீ மட்டும் தனித்து அவற்றைச் சந்திப்பது என்றால் எப்படி? உன்னைச் சந்திப்பானா இறைவன்?

- க. அருள்நேசன்
(குருநகர்.)

## விமானம் மூலம் இங்கிருந்து

# மரணச்சடங்குக்கு செல்வோருக்கு பயண நடைமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

மரணச் சடங்கு தொடர்பாக விமானம் மூலம் அவசரமாகப் பயணம் செய்ய விரும்புபவர்கள் மரணத்தை உறுதிப்படுத்த ''பக்ஸ்'' செய்தியை சமர்ப்பிக்கமுடியாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி அறிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அல்லது பொலீஸ் நிலையம் மூலமாகப் பெறப்படும் மரணத்தை உறுதிப்படுத்தும் செய்தியைச்சமர்ப்பிக்கவேண்டும். அன்றேல் மரணச்சான்றிதழைச் சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மரணம் சம்பவித்தவரின் நெருங்கிய உறவுக்காரருக்கு மட்டுமே அவசர பயண ஏற்பாடு செய்யப்படும் என்றும் —

தூர உறவுக்காரரின் விண்ணப்பம் உடனடிப் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது என்றும் —

அவர் மேலும் தகவல் வெளியிட்டார்.

(ஐ-3)

## நாளை

பங்குனி 14
திங்கட்கிழமை
திதி: ஸப்தமி
பிற்பகல் 5.01 வரை.
நட்சத்திரம்: மூலம்
வைகறை 5.00 வரை
சுபநேரம்: 12.14—1.44
ராகுகாலம்: 7.44 - 9.14
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சமநிலத்தில் செல்லும் தேர் போல் நம்முடைய பேச்சுப் போக வேண்டும், கீழ்த்தரமான, பயனற்ற பேச்சுக்களில் இறங்கக் கூடாது.

- ராஜாஜி

## அதிரடி அரங்கு

நல்ல செயலைப் புரிவதற்காகப் பலரும் ஒன்று திரண்டால் அதைப் பாராட்டலாம். தவறான — பிழையான செயலைப் புரிவதற்காக ஐக்கியப்படுவதை வரவேற்க முடியாது என்பதை அனைவருமே ஏற்றுக் கொள்வர்.

யாழ்.குடாநாட்டுத் தொலைபேசி வசதி கிட்டியதை அடுத்து இப்போது சந்திக்குச் சந்தி தொலைத் தொடர்பு நிலையங்கள். ஒரே சந்தியில் மூன்று, நான்கு தொலைத் தொடர்பு நிலையங்கள் கூட உள்ளன.

தொலைபேசி வசதி கிட்டியதும் போட்டி போட்டுக் கொண்டு — செல்வாக்கைப் பயன்படுத்தி — தொலைபேசி இணைப்பைப் பெற்றவர்கள், ஆரம்பத்தில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, லட்சக் கணக்கில் சம்பாதித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதைப் பார்த்து ஆசைப்பட்டு, யாருடைய கையிலோ, காலிலோ விழுந்து, செய்வதைச் செய்து தொலைபேசி இணைப்பு எடுக்க முயற்சி செய்தவர்கள் இப்போது ஆறுதலாக இணைப்புக் கிடைத்ததும் என்ன செய்வது என்று தெரியாமல் 'ஈ ஓட்டிக் கொண்டு' இருக்கின்றார்கள்— ஏனென்றால் தொலைபேசி இணைப்புகள் மலிந்து விட்டன. பல வீடுகளில் உள்ள இணைப்புகள் கூட தொலைத் தொடர்பு நிலையங்களாக இயங்குவது தான் வேடிக்கை.

இந்த நிலைமையில் வடபிராந்தியத்தில் இவ்வாறு தொலைத் தொடர்பு நிலையம் வைத்திருப்போர் தங்களுக்குள் கூடி ஒரு சங்கம் அமைத்திருக்கின்றார்கள். அது மட்டுமல்ல; தங்கள் நலன் கருதி தாங்கள் வழங்கும் தொலைபேசி அழைப்புக்கான கட்டணங்களையும் அதிகமாக்கி நிர்ணயித்திருக்கின்றார்கள்.

உச்ச நெருக்கடி நேரத்தில் உள்ளூர் அழைப்பு ஒன்றை எடுத்தால் ஒரு நிமிடத்திற்கு ரெலிக்கொம் நிறுவனம் அறவிடும் கட்டணம் 2 ரூபா 25 சதம். அண்மைக் காலம் வரை உள்ளூர் தொலைத்தொடர்பு நிறுவனங்களில் இதற்கு 3 ரூபா முதல் 4 ரூபா வரை கட்டணம் அறவிடப்பட்டு வந்தது. இந்தக் கட்டணத்தை சங்கம் ஐந்து ரூபாவாக்கியுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளுக்கு நேரடி அழைப்புக் கட்டணம் ரெலிகொம் நிறுவனப்படி நிமிடத்துக்கு சுமார் ஐம்பது ரூபா. அதற்கு 90 ரூபா நிர்ணயித்துள்ளது சங்கம்.

அதேபோல ஏனைய வெளிநாடுகளுக்கான (பொதுவான) கட்டணத்தை நிமிடம் ஒன்றுக்கு நூறு ரூபாவிலிருந்து 120 ரூபாவாக அதிகரித்துள்ளது சங்கம்.

தங்கள் கட்டணத்தை உயர்த்தியது மட்டுமல்லாமல், தங்களது சங்கத்தில் இணையாது, தனிப்பட்ட முறையில் — குறைந்த கட்டணத்துக்கு—தொலைபேசி வசதியை வழங்கும் தொலைத் தொடர்பு நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கு எதிராகவும் இவர்கள் போர்க் கொடி உயர்த்தியிருக்கின்றார்கள்.

இது தவறான போக்கும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் நாட்டில் இப்படிக் கூட்டம் போட்டு, ஒன்று சேர்ந்து கட்டணத்தை உயர்த்தி அதைப் பொதுமக்கள் மீது திணிப்பது கண்டிக்கத்தக்கது.

இதைச் சரி என நாம் ஏற்றுக் கொண்டால் (உதாரணத்துக்கு) நாளைக்கு பேக்கரி உரிமையாளர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒரு இறாத்தல் பாணின் விலை 15 ரூபா என அறிவித்தால் நாம் அதனை வாய் மூடிஏற்றுக் கொண்டுதான் போகவேண்டிவரும்.

போட்டிபோட்டுக் கொண்டு மக்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த சேவையை வழங்க முன்வாருங்கள். மக்கள் மீது மாவரைப்பதற்காக ஐக்கியப்படுவது நியாயமற்றது.

தொலைபேசி அழைப்பு விடயத்தில் மக்கள் தலையில் மாவாட்ட விரும்பும் தொலைத் தொடர்பு நிலையங்களை மக்கள் தாமே நிராகரிப்பதுதான் சரியானதாக இருக்கும்.

★ ★ ★ ★ ★

பிரபல கல்லூரி ஒன்றின் ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் வேதனையோடு சுட்டிக்காட்டிய விடயம் இது.

அவரது உறவினருக்கு சுகயீனம் காரணமாகத் தனியார் மருத்துவமனையில் காட்டினார். 'Depo-Medrol' என்ற ஊசி மருந்தை வாங்கித் தருமாறு கேட்கப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள கடைகளில் ஒன்றில் கடந்த 16 ஆம் திகதி அதனை வாங்கினார். வாங்கியவருக்கு அதிர்ச்சி.

கொழும்பில் 80ml அளவு இதே மருந்தின் விலை சுமார் இருநூறு ரூபா. அதே மருந்தை 80ml என்று ரசீது போட்டு 900 ரூபாவுக்குக் கட்டியடித்திருக்கின்றார் மருந்துக் கடைக்காரர். ஆனால் கொடுத்து விட்டதோ 40ml அளவு ஊசி மருந்துதான்.

''மக்களின் ஆடம்பரப் பொருள்களில்வர்த்தகர்கள் விலையை ஏற்றிக் கொள்ளை இலாபம் அடிப்பது வேறு விடயம். மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களில் விலையை ஏற்றிக் கொள்ளை அடிப்பது நியாயமாகுமா?'' என்று வேதனையோடு கேட்டார் அந்த ஓய்வுபெற்ற அதிபர்.

''குளிரூட்டி போன்ற விசேட வசதிகளின் கீழ் வைத்திருக்க வேண்டிய மருந்துக்கு அதற்காக விலை ஏற்றினாலாவது நியாயம் என்று கூறலாம். அதை விடுத்து சாதாரணமாகக் கொண்டுவரும் சிறிய ஊசி மருந்துக்கு ஐந்தாறு மடங்கு விலையேற்றுவது அனுமதிக்கக் கூடியதா? மருந்துக் கடைக்காரர்கள் தமக்குள் ஒரு முடிவுக்கு வந்து இனிமேலாவது நியாயமாகச் செயற்பட வேண்டும்''—என்றும் அவர் கூறினார்.

இனிமேலாவது நீதியாக நடப்பதற்காக சம்பந்தப்பட்டோருக்கு இந்த முறைப்பாடு சமர்ப்பணம்.

- மின்னல்

## அபூர்வ ஜோதிடம்

- நோயின் அவலத்திலிருந்து விடுதலைபெற!
- அதிர்ஷ்டத்தை நோக்கிய வாழ்வு!!
- சிக்கிய பிரச்சினைகளை விரைந்து அகற்றல்!!!

அபூர்வ ஜோதிட நிலையம்
No: UP 304, ஆலடிச் சந்தி
பலாலி வீதி, கந்தர்மடம்.

[74754]

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்

விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன்

### கோபாலசுந்தரம் கணேசா

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்.
யாழ். பல்கலைக்கழகம்.

(74810)

## நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



மண்ணில் 21 — 03 — 1957
விண்ணில் 24 — 02 — 2000

### அமரர் கனகசபை நித்தியானந்தன்
(வேவியர் ஆனந்தன்)

24-2-2000 அன்று சிவபதமடைந்த கனகசபை நித்தியானந்தன் (வேவியர் ஆனந்தன்) அவர்களின் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் (26-3-2000) இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி வடக்கிலுள்ள அவரது தற்போதைய வதிவிடத்தில் நடைபெறும். இவ்வேளையில் அன்னாரின் இறுதிச் சடங்கிலும் இரங்கலுரையிலும் இறுதியாத்திரையிலும் கலந்துகொண்ட அனைவர்க்கும் எமது நன்றிப்பெருக்கினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.
காமாட்சியம்பாள் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(74832)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1976 — 04 — 23
மறைவு 2000 — 03 — 23

### கோபாலசுந்தரம் கணேசா
(குடிசார் இயந்திரவியல் - 2nd year Civil Engineering)

எம் உள்ளங்களில் ...... உணர்வுகளில் ......
நீ எடுத்து வைத்து நடந்த அடிகளின் சுவடுகள்
நினைவில் என்றும் அழியாமல்
நிலைத்திருக்கும்!

எமது தொழில்நுட்பக் கல்லூரி மாணவனின் திடீர் மரணத்தையிட்டு எமது கல்லூரி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது குடும்பத்தவருக்கு எமது இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ் தொழில் நுட்பக் கல்லூரி.

[74830]

## அதிபர் சேவை பதவி உயர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கை அதிபர்சேவைக்கு 1989 ஆம் ஆண்டு தரம் II இல் தெரிவு செய்யப்பட்டவர்களுள் தரம் I க்குச் செல்வதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பந்துசேன தெரிவித்திருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. ப. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்காக கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ். தில்லைநடராசா தலைமையில் அதிகாரிகள் இங்கு வருகை தர உள்ளனர் என்றும் —

ஏற்கனவே நடந்த அதிபர் சேவையின் தரம் III இல் இருந்து தரம் II க்கு பதவி உயர்வு பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களும் இத்தினத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் என்றும் —

அவர் தெரிவித்தார்.

(க-3)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சைவ நெறித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபையின் உப தலைவரும் சைவ நெறித் தேர்வுச் செயலாளருமான சைவப் புலவர் வ. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் திவகலவயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அருளுரை வழங்குவார். 'வாழ்க்கையில் திருமுறை' என்ற தலைப்பிலான கருத்தரங்கு, மற்றும் 'சைவச் சால்பு', 'சைவசமயம் கற்பித்தலின் தனித்துவம்' என்ற தலைப்புக்களிலான கருத்துரைகளும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன.

(ஐ-7)

---

அரிய....

(5ஆம் பக்கத் தொடர்)

கின் வலிமையை 'அக்கினிப் பெருமூச்சின்' உயிர் விசையில் நாம் உணருகிறோம். இந்நாடகம் பற்றிய முணுமுணுப்புகள் வேறெதையும் காட்டவில்லை. நம்மவரிடையும் 'மனச்சான்றுகள்' என்னும் டப்பாக்கள், குற்றுயிராயும் குறை உயிராயும் என்றாலும் மிஞ்சிக் கிடக்கின்றன என்பதையே அவை காட்டுகின்றன.

ஆனால்விழித்துக் கொண்ட மனச்சான்றுகள் மாத்திரம், தனித்து நின்று என்னத்தைச் சாதித்துவிட முடியும்? இங்கு, எங்கள் புறநிலை யதார்த்தங்கள் எத்தகைய பங்களிப்பை (அல்லது பாதிப்பை) தரப்போகின்றன?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண்பது இலகுவான காரியம் அல்ல. காலத்தாயின் உதரத்தில் எவை எவை பிறப்பெடுக்கக் காத்துக் கிடக்கின்றனவோ அவை எல்லாம் கலை உலகினால் மட்டும் தீர்மானிக்கப்படுவன அல்லவே!

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி கலை, வர்த்தக மாணவர் மன்றத்தினால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெறும் இலக்கங்கள்:

1 ஆம் பரிசு - 3008
2 ஆம் பரிசு - 3338
3 ஆம் பரிசு - 3593.

உரியவர்கள் வந்து பரிசினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதிபர்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(74833)

உ
சிவமயம்

## அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி

## விடுதி மேற்பார்வையாளர் (HOSTEL WARDEN)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில் இரத்மலானையிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் இலவச மாணவர் விடுதிக்கு ஒரு மேற்பார்வையாளர் தேவை. நற்பண்பும் சேவை மனப்பான்மையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆசிரியர்கள் அல்லது இளைப்பாறிய ஆசிரியர்கள் விரும்பப்படுவர். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

2000-04-04 ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் விண்ணப்பங்களை மாமன்றத்திற்கு அனுப்பலாம். மேலும் விவரங்களைப் பெற விரும்புபவர்கள், மாமன்றத்தின் வன்னி நிவாரண, இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதிக் குழுச் செயலாளர் **திருமதி அ. கயிலாசபிள்ளையுடன்** தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல: 575566, 575472

பொதுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்,
95/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2.
(தொலைபேசி: 434990 தொலை நகல்: 344720)

(சி/11533)

## அகில இலங்கை இந்து மாமன்றம் அங்கத்தவர்

இலங்கையில் இருக்கும் சகல இந்து நிறுவனங்களும் ஆலய தர்மகர்த்தாக்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் அங்கத்துவம் பெறலாம். அங்கத்துவம் பெற விரும்பும் நிறுவனங்களும் தர்மகர்த்தாக்களும் இல: 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரியிலிருக்கும் எமது தலைமையகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

### இணை உறுப்பினர்கள்

இணை உறுப்பினராக விரும்பும் தனிநபர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை மேற்படி முகவரியில் பெற்று விண்ணப்பிக்கலாம். இணை உறுப்பாண்மை வருடாந்தக் கட்டணம் ரூபா 150/- இணை உறுப்பினர்களுக்கு மாமன்றத்தின் காலாண்டிதழான **'இந்து ஒளி'** இலவசமாக அனுப்பப்படும்.

### வெளியீடுகள்

கீழ்க் குறிப்பிடப்படும் எமது வெளியீடுகளும் விற்பனைக்கு உண்டு.

**தலைமையகக் கட்டடப் பூர்த்தி சிறப்புமலர்**
(பிரதி ஒன்றின் விலை ரூபா 150/-)

**Glories of Shaivaism**
(சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் எழுதியது).
பிரதி ஒன்றின் விலை ரூபா 30/-

**இந்து ஒளி - காலாண்டு வெளியீடு**
(பிரதி ஒன்றின் விலை ரூபா 20/-)

காலாண்டிதழான **''இந்து ஒளி''**யை வருடாந்த சந்தா 80/- செலுத்தி ஆண்டுக்குரிய நான்கு இதழ்களைத் தபால் மூலம் பெறலாம்.

இந் நாட்டின் இந்து சமய வரலாற்றுப் பொக்கிஷமான தலைமையகக் கட்டடப் பூர்த்தி சிறப்பு மலரும் சமய அறிவொளி பரப்பி வெளிவரும் 'இந்து ஒளி' இதழ்களும் ஒவ்வோர் இந்துவின் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய நூல்கள்.

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்

தொலைபேசி: 434990 தொலை நகல்: 344720

(சி/11532)

# புத்தாண்டை முன்னிட்டு நிவாரணம் முன்கூட்டியே வழங்குவதற்கு ஏற்பாடு

மூளாய், மார்ச் 26

புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களை முன்கூட்டியே வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலேயே இவ்விநியோகத்தை மேற்கொள்ளத் தக்க வகையில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. இவ்விடயம் தொடர்பான சுற்றறிக்கைகள் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விநியோகத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-99)

# தென்னைகளில் பரவும் நோய்

மூளாய், மார்ச் 26

யாழ். குடாநாட்டில் தென்னை மரங்களுக்கு புதிய வகை நோய் பரவி வருவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தென்னை அபிவிருத்திச்சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக 'மைற்றா நோய்' என்ற புதிய வகை நோய் பரவி வருகிறது. இந்த நோய் புத்தளம், கற்பிட்டி ஆகிய பகுதிகளில் ஏற்கனவே அவதானிக்கப்பட்டது என்றும் தற்போது யாழ்ப்பாணத்திலும் இந்த நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போது இவ்விடயம் குறித்தும் ஆராயப்பட்டது. தென்னை நோய்கள் சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து தாம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டு தென்னை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்து வருவதாகவும் தென்னை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார். [ஐ-99]

## தென்மராட்சி கல்வி நிலை ஆய்வு

சாவகச்சேரி, மார்ச் 26

தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி மேம்பாடு தொடர்பாக பட்டப்பின்படிப்பு முதுகலை மாணிகள் 40 பேர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கூடி ஆய்வு செய்யவுள்ளனர்.

இந்த ஆய்வு தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆய்வு நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை உட்பட பல கல்விமான்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-31)

## போட்டி முடிவு

கோப்பாய் கல்விக் கோட்டத்தினால் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

தரம் 10 தொடக்கம் தரம் 11 வரை—

★ முதலாம் இடம் — க. கனிஸ்ரலா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

★ இரண்டாம் இடம் — ஜெ. நிரோசினி (புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி)

★ மூன்றாம் இடம் — த. தவச்செல்வன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

தரம்12தொடக்கம்13வரை

★ முதலாம் இடம் — உ. சுரேஸ்காந்த் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

★ இரண்டாம் இடம்— ஆ. சுவந்தா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

★ மூன்றாம் இடம் — ந. ஷாலினி(நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, து. தயாளினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி). (ஐ-10)

# மட்டக்களப்பு குடும்பப்பெண் கைக்குழந்தையுடன் கைது

மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச்சேர்ந்த இளம்குடும்பப்பெண் ஒருவர் தனது ஏழு மாதக் குழந்தையுடன் கடந்த செவ்வாயன்று குற்றப் புலனாய்வுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி., தியேட்டர் வீதியைச் சேர்ந்த சுகந்தி நரேந்திரன் (வயது 30) என்பவரே தனது குழந்தையுடன் கண்டியில் இருந்து வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுக் கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கண்டியில் வைத்துக் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவரும் ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த புதன்கிழமை சம்பந்தப்பட்ட பெண்ணின் கணவரான நரேந்திரனும் விசாரணைக்காகக் கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (ஐ-7-21)

# வலி. மேற்கில் 25 வீடுகள் ஜேர்மன் நிறுவனம் அமைக்கும்

மூளாய், மார்ச் 26

வலிகாமம் மேற்கில் ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் மேலும் இருபத்தைந்து வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

பெண்களை மட்டும் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இந்த வீடமைப்புத்திட்டம் சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கைகளை வலி. மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டு மூளாய், பொன்னாலை, அராலி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இந்த நிறுவனத்தின் உதவியுடன் வீடமைப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டுக்கான புதிய திட்டத்தில் வலிகாமம் மேற்கின் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்காக தற்போது கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. [ஐ--99]

## மாணவர் வரவேற்பு வைபவம்

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவன மாலை நேர மாணவர்களின் வரவேற்பு விருந்துபசார வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு விழாக் குழுத் தலைவர் வி. தயாபரன் தலைமையில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் நிறுவன இயக்குநர் ரி. இராஜரட்ணம் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் சே. தேவராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

# ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமை; நிலைமையை விளக்கி அறிக்கை

சில ஊழியர்களின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்படாதது குறித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட அறிக்கை இது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிரந்தரமற்ற வகையில் பணிபுரிந்து வந்த ஊழியர்களில் அறுபதுக்கும் மேற்பட்டோரை நிரந்தரமாக்கியமை சம்பந்தமாகவும் ஏனைய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமை குறித்தும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

### தொழிற்சங்கச் சம்மேளனத்தின் கோரிக்கை

நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் நிரந்தரமற்ற முறையில் தற்காலிக, அமைய ஒப்பந்த ரீதியில் யோசனைகார ஊழியர்கள் பெருமளவு உள்வாங்கப்பட்டு வருகின்றமையையும் அவர்கள் வெற்றிடங்களுக்கு மேலதிகமாகவும் நியமிக்கப்படுவதையும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் அவதானித்து வந்தது.

நிரந்தரமற்ற இவ்வூழியர்களை தொழிற்சங்கப் போராட்ட காலங்களில் நிரந்தர ஊழியர்களின் பணிகளுக்காக பயன்படுத்தும் ஏதுநிலை குறித்தும் சம்மேளனம் கவலையடைந்திருந்தது. அனைத்துப் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பணிப்பாளர் சபை சமர்ப்பித்த அறிக்கையொன்றில்நெருக்கடியான காலகட்டங்களில் இத்தகு ஊழியரை வேலை நிறுத்தம் செய்யும் ஊழியருக்கு எதிராகப் பயன்படுத்துதல் பற்றி வெளிப்படையாகவே கூறப்பட்டிருந்தது. மேலும் நிதிக்கிளையின் சில பிரிவுகள், பாதுகாப்பு போன்ற பகுதிகளை தனியார் மயப்படுத்துவது பற்றியும் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இத்தகு நிலைமைகள் எதிர்காலத்தில் இல்லாதொழிக்கப்பட வேண்டுமென சம்மேளனம் கருதியது. இதனை தொழிற்சங்கப் போராட்டத்தில் (மார்ச் / ஏப்ரல் 99) ஒரு கோரிக்கையாகவும் முன்வைத்தது. இதனடிப்படையில் பெறப்பட்ட சுற்றறிக்கையே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கை 749 ஆகும்.

### முக்கிய அம்சங்கள்

1. பல்கலைக்கழக சேவையில் ஒருவருட சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்கள் 01.08.98—31.07.99 காலப் பகுதிக்குள் 180 நாள்கள் பணியாற்றியிருப்பின் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

2. பல்கலைக்கழகங்களில் வருங்காலத்தில் அமைய / பதில் கடமை ரீதியில் எவ்வித நியமனங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது. (1) இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனையினை பூர்த்தி செய்யாத ஊழியருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படக் கூடாது.

3. ஒரு குறுகிய காலத்துக்கு, மேலதிக வேலையாள் ஒரு விசேட பணிக்காக அவசியம் தேவையென நியாயப்படுத்தப்படுமிடத்து பல்கலைக்கழக பேரவையின் அனுமதியுடன் ஒருவர் 3 மாத காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படலாம். எந்தவித சூழ்நிலையிலும் இவ்வொப்பந்தப் பணியாளரின் சேவை 5 மாத காலத்துக்கு மேல் நீடிக்கப்படக் கூடாது. ஒப்பந்த அடிப்படைப் பணியாளர் வழக்கமானபணிகளைச் செய்ய உபயோகப்படுத்தப்படக்கூடாது.

4. A15முதல் A5 வரையிலான தரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் காணப்படின் அவை சுற்றறிக்கை 698 (31—01—97) இன் பிரகாரம் நிரந்தரமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ நிரப்பப்படலாம். அவ்வாறு 698 இன் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட கால திருப்திகரமான சேவைக்குப் பின் நிரந்தரமாக்கப்படலாம். இங்கு சுற்றறிக்கை 698 என்பது உயர்கல்வி அமைச்சிலிருந்து பெறப்படும் பெயர்ப் பட்டியலிலிருந்து ஆள்சேர்ப்பு விதிக்கிணங்க தெரிவினை மேற்கொள்ளலாகும்.

5. மேலே கூறப்பட்ட வழிகாட்டுதல்களை உயர்கல்வி நிறுவனங்கள் பின்பற்றுகின்றனவா என்பதை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தொடர்ச்சியாகமேற்பார்வை செய்யவுள்ளது.

### பல்கலைக்கழக நிர்வாகத்தின் நிலை

எமது பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளைக்காரணம்காட்டி 1996 இன் பின் நூற்றுக்கும் அதிகமானோர் உள்வாங்கப்பட்டனர். எந்தவிதமான ஆள் சேர்ப்பு விதிமுறைகளுமின்றி வெற்றிடங்களுக்கும் மேலதிகமாகவும் இவ்வாறு பணியாளர்களை உள்வாங்கலால் ஏற்படும் அபாயம் குறித்து ஊழியர் சங்கம் துணைவேந்தரை தொடர்ந்து எச்சரித்து வந்தது. இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் அதிகாரிகளின் சிபாரிசின் காரணமாகவே உள்வாங்கப்பட்டனர். இவர்களில் 10 க்கும் குறைவான ஊழியர்களின் பிள்ளைகளும் காணப்பட்ட போதும் இவர்களைக்கூட எச்சந்தர்ப்பத்திலும் ஊழியர் சங்கம் சிபாரிசு செய்யவில்லை.

சுற்றறிக்கை 749 இன் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 60-க்கும் மேற்பட்ட நிரந்தரமற்ற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர். அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியைப் பூர்த்தி செய்யாத ஊழியர்களுக்குச் சேவை நீடிப்பு வழங்குவதில்லை என பேரவை தீர்மானம் மேற்கொண்டது. இத்தீர்மானம் சுற்றறிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும்.

1998 ஆம் ஆண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு யாழ். செயலக வேலை வங்கியிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. இது உண்மையில் ஒரு கேலிக் கூத்தாகும். பல வருடங்களாக செயற்பட்டிருந்த வேலைவங்கி முறையை யாழ். பல்கலைக்கழக அதிகாரிகள் சிலருடன் செயலக அதிகாரிகள் சிலர் இணைந்து "மீள உயிர்ப்பித்து" பெயர்ப்பட்டியலொன்றைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைத்தனர். வெற்றிடமொன்றுக்கு ஆறுபேர் என்ற விகிதத்தில் இப்பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 15 வெற்றிடங்களுக்கு 25 பேர் கொண்ட பெயர்ப்பட்டியலே அனுப்பப்பட்டது. அதிலும் சிலருக்கு வேலைவங்கி இலக்கமில்லையெனக் கூறப்பட்டு அவர்கள் பெயரைப் பல்கலைக்கழகம் நிராகரித்திருந்தது. இறுதியாக 17 பெயர் கொண்ட பட்டியலிலிருந்து 10 வெற்றிடங்களுக்கு 14 பேர் நியமிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் வேலையற்று வேலை வங்கியில் பதிவு செய்திருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களில் இவர்கள் எவ்விதம் பல்கலைக்கழகப் பாதுகாப்புச்சேவகர் பதவிக்கு வேலைவங்கியினால் சிபார்சு செய்யப்பட்டனர் என்பது இதுவரை பல்கலைக்கழகத்தினால் தெளிவுபடுத்தப்படவில்லை. இவர்கள் உயர் கல்வித் தகைமைகளோ அல்லது விளையாட்டுத் தகைமைகளோ கொண்டவர்களாகக் காணப்படவில்லை. 749 சுற்றறிக்கையின் பிரகாரம் இவர்களும் உரிய காலத்தைப் பூர்த்தி செய்யாமையால் நிரந்தரமாக்கப்படவில்லை. இவர்கள் நிரந்தரமாக்கப்படுவதாயின் குறித்த சுற்றறிக்கையில் மாற்றம்செய்யப்படுவதே ஒரே வழியாகும்.

எமது பல்கலைக்கழகத்திலுள்ள சில நிர்வாகிகள் இப்பிரச்சினை குறித்து நடந்து கொள்ளும் முறை எம்மை வேதனைக்குள்ளாக்கியுள்ளது. பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சம்மதம் தெரிவிப்பின் இத்தகு ஊழியரை நிரந்தரமாக்கலாம் எனக் குறிப்பிடுவதும் ஊழியர் சங்கத்தின் "நாடி"யறிந்து வருமாறு அவ்வூழியர்களுக்கு கூறுவதும் நேர்மையும் பண்புமுடைய செயல்களல்ல— இவ்வூழியர்கள் மீது உண்மையான அக்கறையிருப்பின் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு சுற்றறிக்கை மாற்றத்துக்கு வழிகோலுமாறு இவ்வதிகாரிகளை மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

சுற்றறிக்கைக்கு முரணான வகையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளலை இனி மேலும் தொடர முயற்சிப்பது பல்கலைக்கழக மட்டாரங்களில் புதிய பிரச்சினைகளை உருவாக்குமென சுட்டிக் காட்டவும் கடமைப்பட்டுள்ளோம்.

★

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக் கோழிகள்

Broiler, Cullbirds இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து [பாதிக்கோழி உட்பட] தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, இன்றும் என்றும் விஷேட சேவை. 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு], முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

[73672]

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(74726)

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு; இல. 15,6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்.)

(74729)

இறைச்சிக்கோழி(Cullbird) விற்பனைக்கு உண்டு.மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இராசநாயகம், 38/10,மருதடி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(74822)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு).

(74664)

இறைச்சிக்கோழி (Broiler) மற்றும், சேவல், கல்பேட்ஸ், விறாத்துக்குஞ்சுகள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குஉண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும்.தொடர்பு:- இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

(74817)

குறைந்த விலையில் சகல நிறையிலும் தினமும் புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் அல்லது 217/A,ஆஸ்பத்திரிவீதி, (மூலவைச் சந்தி), யாழ்ப்பாணம்.

[74809]

### வீடு விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் குடிநீர், மின்சாரம், பயன்தரும் தென்னை மரங்கள் உள்ள நிலப்பரப்பு 1¼ விஸ்திரணமுள்ள வீடு நியாயமான விலையில் உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. இ. ஈஸ்வரகுமாரன் இல. 18/1 (04). ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(74750)

### திருமணசேவை

எங்களிடம் Doctor, Engineer, Accountant, B.A., B.Sc. போன்ற குறிப்புகள் உள்ளன. குறிப்பு; புகைப்படம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, இல. 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(74820)

### திருத்தப்படும்

எல்லா மிருதங்க வேலைகளும் நல்ல முறையில் செய்து தரப்படும். [தொடர்புகளுக்கு: திரு. ந. சிவானந்தன், இல. 52, சந்தனமாதா கோயிலடி, சுண்டுக்குளி.

(74885)

### தவறிவிட்டது

105, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர் கிழக்கைச் சேர்ந்த மகேஸ்வரன்சஜெந்திரா என்பவரது தேசிய அ. அட்டை (இல.793122144 V),விசேட அ. அட்டை, யா/ மத்திய கல்லூரி பாடசாலை அ. அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவு செய்து யாழ். மத்திய கல்லூரியில் ஒப்படைத்துதவவும்.

(74779)

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் தயாபரன் என்பவரது விசேட அ. அட்டை (090405030), தேசிய அடையாள அட்டை (782952811V), கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அ. அட்டை என்பன 20-3-2000 அன்று விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நவம்ஸ் தொலைத்தொடர்பு: பிரதான வீதி, சுழிபுரம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(74789)

கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கைச்சேர்ந்த செல்வராஜா ஜெனிதா என்பவரது விசேட அ. அ. (இல. 0902014338) 04-03-2000 அன்று (இல.750,) பருத்தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் கூறிய முகவரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும்.

(74793)

தோலை, அல்வாய் தெற்கைச் சேர்ந்த திருமதி அ. கதிர்காமத்தம்பி என்பவருடைய குறிப்பிட்ட தொகையுடன் கூடிய பணப்பையும் தேசிய, ஓய்வூதிய அ.அ. என்பனவும் 10-03-2000 அன்று நெல்லியடியில்தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி. மொடேண் ஸ்ரோர்ஸில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(சி/11525)

இல. 15, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சதாசிவம் அரிகரன் என்பவரது விசேட அ. அ. (இல. 0902030518) 20-03-2000 அன்று முத்திரைச்சந்திக்கும் நாயன்மார் கட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள சுதாஸ் கிறீம்ஹவுஸ் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(74825)

### வாடகைக்கு

யாழ். நகரை அண்டிய மையப்பகுதியிலும் மக்கள் குடியிருப்பு நிறைந்த பிரபல பாடசாலை, அலுவலகங்களுக்கு அருகிலும் இருபது வருடங்களுக்கு மேல் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரபல பலசரக்கு, வர்த்தக வியாபார ஸ்தாபனம் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- விளம்பர இல. 1033, மே/பா உதயன்.

(சி/11524)

### A/L இணைந்த கணிதம்

இணைந்த கணிதம், பௌதிகவியல், தூய பிரயோக கணிதம் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். (20 வருட வினாத்தாள் உட்பட). தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. R. பாலசுப்பிரமணியம், B. Sc. (Cey), Dip. in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(74823)

### விற்பனைக்கு

National (Japan) Deck (N V- 450 EN) உம் Volkswagon 8 ஸ்ரீ தொடர் காரும் உடன் விற்பனைக்கு. பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு பிற்பகல் 3.00 - 5.00 வரை. தொடர்பு: இல. 67, செட்டித் தெரு, நல்லூர்.

(74698)

YAMAHA-PSS 26, ஓகன், கிற்றார், மிருதங்கம் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ப. தேவகுமார், மூளாய் வீதி, மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

(74746)

135 டிராக்டர் 36 சிறி (Crank Standard) 5 - ஆணி கொழும்புப் பெட்டி, புத்தம் புதிய SD 225 நஷனல் பனசோனிக் டெக்(Japan) Food Processor அரைக்கும் மெசின்.தொடர்பு:R.அருளானந்தம் மாஸ்டர், 115, பொன்னம்பலம் வீதி, அரியாலை.

(74742)

அயன்சேவ் ஒன்று எம்மிடம் விற்பனைக்காக உள்ளது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 99/4, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

(74818)

### கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம் பிரதம தபாற் கந்தோருக்கு முன்பாக சிறுதொகைப்பணம் 23-3-2000 அன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: வாமாஸ், மதுபானக் களஞ்சியம், 56/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(74783)

### தேவை

பிரபல்யம் உள்ள புத்தகசாலைக்கு லிகிதர், விற்பனையாளர்கள் உடன் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். அனுபவமுள்ளவர்களுக்கு முதலிடம். தொடர்பு:இல. 363, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

(74782)

### லகு சோதிடம்

இந்தியாவில்காஞ்சிபுரத்தில் சோதிடக் கலையைக் கற்றவரும், விஜேந்திர சுவாமிகளின் மாணவருமான பிரம்மஸ்ரீ சுந்தர - வகுதரசர்மா என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம் எழுதுதல், திருமணப் பொருத்தங்கள் பார்த்தல், நாள் எழுதுதல், மலையடி சாஸ்திரம் பார்த்தல் போன்றவற்றைப் பார்த்து உங்கள் வாழ்வு நலம்பெற தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: முத்துமாரியம்மன் கோயில், திருகோணமலை.

(74790)

### உடன் விற்பனைக்கு

சாணன் இனக் கடாவும் கன்னி மறியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குட்டி விதானை, கண்டி வீதி, மீசாலை.

(சி/11528)

### ஆங்கிலம் விசேடமாக

O/L,/AL Credits Distinction பெறுபேறுடையவும் Paper Class, G. A. Q. பட்டப்படிப்பு,(Spoken English உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc. (Cey) London Inter, 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி.

(74791)

### T.V விற்பனைக்கு

NationalSony2171,Sony 2192, Sony2060. T.V கள் விற்பனைக்குண்டு.தொடர்பு: இல.59, சிவன் புது வீதி, நல்லூர்.

(74780)

## மிலேனியம் ஆண்டில் அகவை ஒன்று



கிருஷ்ணகுமார் - தேவிகா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### செல்வன் கோபி

தனது முதலாவது பிறந்ததினத்தை அவரது இல்லத்தில் இன்று (26-03-2000) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கோபியை அவரது அன்பு அப்பா, அம்மா, சித்தப்பாமார், மாமாமார், அனைவரும் பல்லாண்டுகாலம் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு அம்மா, அப்பா.

காளிகோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(74806)

## நல்லூர் வணிகர் கழகம் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

இடம்: Y. M. H. A மண்டபம்,
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

காலம்: 02-04-2000 ஞாயிற்றுக்கிழமை
புதிய நேரம் 10.30 மணி

முக்கிய குறிப்பு: நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வர்த்தகர்களும் அன்றையதினத்தில் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வே. திருநாவுக்கரசு
கௌரவ செயலாளர்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(74800)

## லயன்ஸ் கழகத்தின் பிராந்தியக் கருத்தரங்கு

(பிராந்தியம் 9, 10)

ஏற்பாடு: லயன் ஐ. தங்கேஸ்வரன்
(பிராந்தியத் தலைவர் 10)

இடம்: வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம்

நாள்: 26 - 03 - 2000

நேரம்: காலை 10.00 மணி

பிரதம விருந்தினர்: லயன் எஸ். பத்மநாதன்
(பிராந்திய ஆலோசகர்)

லயன் சீமாட்டி
புஷ்பம் பத்மநாதன்

கௌரவ பேச்சாளர்:
லயன் கே. ஜெயரட்ணம்

கருத்தரங்கை நெறிப்படுத்துபவர்:
டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்
(மாவட்டத் தலைவர், கண் பார்வை, மருத்துவம்)

பிராந்தியம் 9, 10 ஆகியவற்றில் உள்ள அரிமாக் கழக உறுப்பினர்களையும் சீமாட்டிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

லயன் ஐ. தங்கேஸ்வரன்,
பிராந்தியத் தலைவர்.
(பிராந்தியம் 10)

(சி/11530)

## ஒத்திவைக்கப்பட்டது

யாழ். வீதி ஞானக்குழந்தை இல்லம்
பாலர் பாடசாலை புனரமைப்புக்கான
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

இன்று (26-03-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

*சீட்டிழுப்புத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்*

- யாழ். வீதி ஞானக்குழந்தை இல்லம்

(74840)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
V.கோபாலசுந்தரம் அவர்களின் மகன்

**செல்வன் கோ.கனேசா**
(விஞ்ஞானபீட புகுமுக மாணவன்)

அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையுற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதம பொறியியலாளர்,*
*சக உத்தியோகத்தர்கள், வீதி ஒப்பந்தக்காரர்கள்,*
*வீதி அபிவிருத்தித் திணைக்கள*
*யாழ்ப்பாணப் பிரிவு.*

(74839)

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

**14-01-2000 அன்று நடைபெற இருந்து பிற்போடப்பட்ட மேற்படி சீட்டிழுப்பு 26-03-2000 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*செயலாளர்*
*யா.ம.க.ப.மாணவர் சங்கம்*

(74847)

## பருவகால சீட்டுக்கள் பஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச்26

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கான பருவகாலச் சீட்டுக்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இதுவரை இந்தப் பருவகாலச் சீட்டுக்கள் கோண்டாவில் டிப்போவில் வைத்தே வழங்கப்பட்டு வந்தன. இதனால் மக்களுக்கு ஏற்பட்டு வந்த அசௌகரியங்களைக் கவனத்தில் கொண்டு இந்த மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வடபிராந்தியப் போக்குவரத்து முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதத்துக்குரிய பருவகாலச் சீட்டுக்கள் இன்று 26ஆம் திகதி முதல் ஏப்ரல் 5ஆம் திகதி வரை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

இந்தத் திகதிகளிலேயே ஒவ்வொரு மாதத்துக்கும் உரிய பருவகாலச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்கள் பாடசாலைகளில் வைத்தே நேரடியாக வழங்கப்படும்.

இதுவரை காலமும் பாடசாலை மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டைப் பெற்றுக்கொடுக்காத அதிபர்கள் அத்தாட்சிப்படுத்திய பட்டியலை அனுப்பி ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-க)

## மாணவர் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்26

அரியாலை மாம்பழச் சந்திக்கருகில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதலாம் வருட மாணவனான கோபாலசுந்தரம் கனேசாவின் மரணத்துக்கு அஞ்சலி தெரிவிக்கும் முகமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து துக்கம் அனுஷ்டித்தனர்.

KOBE

*நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?*

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்'

(C/10933)

அகால மரணமான
விஞ்ஞானபீட புகுமுக மாணவன்
**செல்வன் கோபாலசுந்தரம் கனேசா**
அவர்களின

## இறுதி அஞ்சலிக்கூட்டம்

**இடம்: விஞ்ஞானபீட உயிரியல் (NSB) மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.**
**காலம்: இன்று (26-03-2000) ஞாயிற்றுக்கிழமை, காலை 8.00 மணி**

### அஞ்சலி நிகழ்வுகள்

* *ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைத் துதித்தல்*
* *விஞ்ஞானபீட மாணவ பிரதிநிதிகள் அஞ்சலி உரை*
* *சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அஞ்சலி உரை*
* *விஞ்ஞான பீடாதிபதி அஞ்சலி உரை*
* *கவிதாஞ்சலி*
* *உறவினர் அஞ்சலி உரை*

**பல்கலைக் குடும்பத்தின் மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், போதனைசாரா உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள், உறவினர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தும் முகமாக பூதவுடல் விஞ்ஞானபீடத்தில் வைக்கப்பட்டு பின்பு இறுதிஊர்வலத்துடன் அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.**

விஞ்ஞானபீட மாணவர்கள்
ஏற்பாட்டுக்குழு.

(74831)

# மரண அறிவித்தல்கள்

## கனகரத்தினம் பாலசுந்தரமூர்த்தி

தனங்களப்பைச் சேர்ந்த கனகரத்தினம் பாலசுந்தரமூர்த்தி நேற்று முன்தினம் (24-03-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகரத்தினம் - கண்மணி அவர்களின் அன்பு மகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் சைலஜா, சுகன்யா, நிரோஜன், துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகானந்தனின் (யோகா கிறீம்ஹவுஸ், மந்திகை) அன்பு மாமனாரும் கிருஷ்ணமூர்த்தியின் சகோதரனும் திரு. திருமதி சோமசுந்தரம் தம்பதியினரின் (நுணாவில் மேற்கு) அன்பு மருமகனும் நிர்மலா, பாலச்சந்திரன் பாரதி (ஆசிரியர், அமிர்தாம்பிகை), சௌந்தரவல்லி (சுவிஸ்), இராமச்சந்திரன் (வ.பி.போ.ச), நாகேஸ்வரி (ஜேர்மனி), சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகேந்திரன், சிவனேசன் (வ.பி.போ.ச), ஜெயானந்தன் (சுவிஸ்), ராசகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் தவநேசன், கேதாரகௌரி, தவரஞ்சன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் கபிலன், அகிலன், கௌசிகன், கௌதமன், கௌதமி, மீரா (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் சங்கவியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (24-03-2000) வெள்ளிக்கிழமை வேம்பிராய் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
**யோகானந்தன்**
(மருமகன்)
யோகா கிறீம் ஹவுஸ்

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

(74827)

## திருமதி நடராசா நாகம்மா

சரவணை மேற்கு, வேலணையைச் சேர்ந்த திருமதி நடராசா நாகம்மா அவர்கள் நேற்று (25.03.2000) சனிக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சரவணையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**செ.பத்மநாதன்**
(குட்டி)

*சரவணை மேற்கு,*
*வேலணை.*

(74845)

## கோபாலசுந்தரம் கனேசா

(படவரைஞர், பொது சுகாதார பரிசோதகர், யாழ்/பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானபீட புகுமுக மாணவன்)

அரியாலையைச் சேர்ந்த கோபாலசுந்தரம் கனேசா 23.03.2000 வியாழக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் கோபாலசுந்தரம் (ஓய்வுபெற்ற படவரைஞர், பெருந்தெருக்கள் திணைக்களம், தற்போதைய லிகிதர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) - குகதாம்பாள் (ஆசிரியை, அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை) ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் சுபாஷினி, கந்தா, உருத்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாரதி (இளைப்பாறிய உப அதிபர், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ் (லிகிதர், யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), நித்தியானந்தன் ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெகதாம்பாள் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற டேவிட் இராஜசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), லலிதாம்பாள் (ஓய்வுபெற்ற உப அதிபர், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை), இராஜகுலபாலசூரியர் (ஓய்வுபெற்ற பரிசோதகர், யாழ். கட்டடத் திணைக்களம்), தவம் (லண்டன் - முன்னாள் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
**வே.கோபாலசுந்தரம்**
(தந்தை)

*26, கதிரவேல் லேன்,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(74835)

## யுத்தத்தை நிறுத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஆயர் மேலும் கூறியதாவது:-

எமது வீடுகள் நொருக்கப்பட்டு மனித உரிமைகள் மறுக்கப்பட்டு மாண்புடனும் சுதந்திரத்துடனும் வாழும் உரிமை மறுக்கப்பட்டு வாழ்வியல் அடிப்படைகள் மறுக்கப்பட்டு மக்கள் பல துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

உண்மையான சமாதானம் ஒவ்வொருவரது உரிமையிலும் காட்டப்படவேண்டும். பொறுப்புவாய்ந்த தலைவர்கள் யுத்தத்தை நிறுத்த வேண்டும்.

அர்த்தமுள்ள பேச்சுக்கள் மூலம் மூன்றாம் தரப்பு உதவியுடன் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர உதவுங்கள் - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் உரையாற்றும்போது கூறியதாவது:-

பயங்கரமான யுத்தத்தின் மூலம் இந்த மண் அழிந்து கொண்டிருக்கிறது. எமது இளம்சமுதாயம் மாண்டு கொண்டிருக்கிறது. இது வரவேற்கக் கூடிய தல்ல. சமாதானப் பேச்சுக்கள் மூலம் எம்மத்தியில் நிலவும் துயரங்களைக் களைந்து சந்தோஷமான வாழ்க்கையை ஏற்படுத்தவேண்டிய கடமை அரசுக்கு உண்டு. நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து அரசுக்கு அதை உணர்த்தும் காலம் வந்துவிட்டது.

எமது மக்களுக்கு நீதியான தீர்வும் நிம்மதியான வாழ்வும் கிடைக்க வேண்டும். தமிழ்மக்களது குரல் இன்று உலகம் முழுவதும் ஒலிக்கிறது. சமாதானக் குழு எடுத்த முயற்சி உலகம் முழுவதிலும் ஒலிக்க இறைவன் ஆசீர்வதிப்பாராக - என்றார்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றும்போது கூறியதாவது:-

சமாதானத்துக்கு நல்லெண்ணம் தேவை. அந்நிலையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தி மக்கள்படும் தொல்லைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

இன்றைய கூட்டம் எமக்கு எழுச்சியை அளிக்கிறது. எம்மைத் தட்டி எழுப்புகின்றது. நாங்கள் நல்லதை எண்ணுவோம். நல்லதைச் செய்வோம்.

இந்த மண்ணில் சமாதானத்துடன் வாழ மதத்தலைவர்கள் எடுத்த முயற்சி வெற்றிபெற வேண்டும் - என்றார்.

இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் பேசும்போது கூறியதாவது:-

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினால் சிறப்பான முறையில் நடத்தப்பட்ட பேரணி மூலம் இன்று எமது உணர்வுகளை வெளிப்படுத்த முடிந்தது. நாங்கள் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ முடியவில்லை. எமக்கு சமாதானம் வேண்டும். போர் வேண்டாம் - என்றார்.

யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர்எம்.எஸ்.ஹமீத் உரையாற்றும்போது கூறியதாவது:-

மதம், மொழி என்பனவற்றுக்கப்பால் நாங்கள் அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வு எப்பொழுது எம்மத்தியில் தோன்றுகின்றதோ அன்றுதான் உண்மையான சமாதானத்தைக் காணமுடியும்.

எமது நாளைய செல்வங்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால் நாம் சில தியாகங்களைச் செய்தே ஆகவேண்டும். யாழ்.முஸ்லிம்களைப் பொறுத்தவரை இதுவரை காலமும் நடைபெற்ற யுத்தத்தினால் 83 பேர் பலியாகியுள்ளனர். சமாதானம் வேண்டி நாங்கள் எல்லோரும் தினமும் இறைவனைப் பிரார்த்தனை செய்வோம் - என்றார்.

யாழ்.நகர் நாகவிகாரை விகாராதிபதி ஞானரத்ன தேரர் உரையாற்றுகையில் எங்களுக்கு போர் வேண்டாம் சமாதானமே வேண்டும். வடக்கிலோ தெற்கிலோ எங்கிருந்தாலும் எல்லோரும் இந்த நாட்டு மக்களே. எனவே எமது மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் - என்றார். தென்னிந்தியத் திருச்சபை ஆயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் வன்னியில் இருந்து அனுப்பிய ஆசிச் செய்தியும் அங்கு வாசிக்கப்பட்டது. தொடர்ந்து, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் இணைச் செயலாளர்களில் ஒருவரான சு.பரமநாதன் நன்றியுரை வழங்கினார்.

## நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நோர்வே அரசின் மத்தியஸ்த முயற்சி தொடரும் என்று அவர் ரணிலுக்கு உறுதியளித்தார்.

நோர்வேயின் புதியஅரசு மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடுவதற்கு விடுதலைப்புலிகளும் விருப்பம் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

## பேரணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
* "பேச்சுப் பேச்சு சமாதானப் பேச்சு!"
* "சொந்தக் காணியில் வாழ விடு எங்களை மீளக்குடியேற்று"
* "சண்டை மூலம் சமாதானம் ஆகுமா?"
* "வாட்டாதே வாட்டாதே வன்னியரை வாட்டாதே!"
* "மருந்துகளை அனுப்பு மனிதத்தை மதித்து நட!"
* "வாழவிடு வாழவிடு சொந்த வீட்டில் வாழவிடு!"
* "சீர்குலைக்காதே சீர்குலைக்காதே கலாசாரத்தை சீர்குலைக்காதே!"
* "வளரவேண்டும் வளரவேண்டும் ஒற்றுமை வளரவேண்டும்"
* "நிறுத்து நிறுத்து யுத்தத்தை நிறுத்து தொடங்கு தொடங்கு பேச்சு-வார்த்தை தொடங்கு"
* "தொடரு தொடரு சமாதானப் பேச்சை கண்டிடு கண்டிடு தீர்வைக் கண்டிடு!" (ஐ-5-8-9-111-186)



யாழ்.நகரில் நேற்று நடைபெற்ற சமாதானப் பேரணியின் இறுதியில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆசியுரைகளில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.ஆயர் வணபிதா தோமஸ் சௌந்தரநாயகம், முஸ்லீம் பிரமுகர் எம்.எஸ். கமீத், யாழ். நாக விகாரை விகாராதபதி ஞானரத்தின தேரர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உரையாற்றும்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. படங்கள்:பொ.இராஜேஸ்வரன்.

## பல்லாயிரக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நலில் இருந்து காலை 9.30மணிக்கு பேரணி ஆரம்பமானது.

இந்து சமயகக்குருமார்கள் முன்னணியில் செல்ல அவர்களுக்குப் பின்னால் கிறிஸ்தவ மதகுருமார்கள், அருட்சகோதரிகள், கல்வியாளர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் முஸ்லிம் பிரமுகர்கள் மற்றும் கூட்டறவாளர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் பொதுமக்கள் என நீண்டதூரத்துக்கு பேரணி நகர்ந்து கொண்டேயிருந்தது.

கோயில் வீதியை அடைந்த பேரணியினர் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஐ.நா அபிவிருத்தித்திட்டம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றின் யாழ். வதிவிடப் பிரதிநிதிகளிடம் மகஜர்களை கையளித்தனர்.

மகஜர்களை ஏற்றுக்கொண்ட மேற்குறிப்பிட்ட அலுவலகங்களின் பிரதிநிதிகள், நாட்டில் சமாதானம் ஏற்படுவதையே தாமும் விரும்புவதாகத் தெரிவித்தனர்.

தொடர்ந்து கோயில் வீதியூடாக பிரதான வீதியை அடைந்த பேரணி அங்கிருந்து திரும்பி துரையப்பா விளையாட்டரங்கை அடைந்தது. பேரணிக்குப் பின்னால் ஆட்டோ மற்றும் லொறிகளின் வாகன அணிகள் வந்துகொண்டிருந்தன. துரையப்பா விளையாட்டரங்கில் மதத் தலைவர்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

ஆசியுரைகளைத் தொடர்ந்து பகல் 12 மணியளவில் இந்த நிகழ்வுகள் முடிவடைந்தன.

பின்னர் ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜர் பேரணி ஏற்பாட்டாளர்களால் யாழ்.செயலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அரச அதிபர் க.சண்முகநாதனிடம் கையளிக்கப்பட்டது.

பேரணி நகர்ந்து வந்து கொண்டிருந்த சமயம் தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் பேரணியினரிடையே துண்டுப்பிரசுரம் விநியோகிக்க முற்பட்ட சம்பவமும் இடம்பெற்றது. பேரணி ஏற்பாட்டாளர்கள் இதனை அனுமதிக்க வில்லை.

பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ்.நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

(இ-5-9-10-8-111-4-180-73-103-15)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளாவர் இராணுவத்துக்கு ஏற்பட்ட இந்தப் படுமோசமான பின்னடைவு குறித்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தலைமையிலான விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில் மேஜர் ஜெனரல் ஜாமினி குணசேகர மற்றும் பிரிகேடியர் போரான் ஆகியோர் இராணுவத்துக்கு ஏற்பட்ட தோல்வி காரணமாக ஏற்கனவே தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டிருந்து குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தின் 50 வருடகால வரலாற்றில் உயர் இராணுவ அதிகாரிகள் 7பேர் ஒரேதடைவையில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டது இதுவே முதல் தடைவை.

## யாழ். இந்து....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

**14 வயது - ஆண்**
* சாம்பசிவம் ஸ்ரீ கோகுலன் (யாழ்.இந்து)
* ஜெயநந்தராஜா ஜெயபிரியந்தன் (மகாஜனா)

**14 வயது - பெண்**
* ராதிகா சிவானந்தன் (யாழ். இந்து மகளிர்)
* ரேவதி ஜெயராஜசிங்கம் (யாழ். இந்து மகளிர்)

**12 வயது - ஆண்**
* சிவானந்தன் அருணன் (யாழ். இந்து)
* பரராஜசிங்கம் இந்திரகுமார் (யாழ். இந்து)

**12 வயது - பெண்**
* அனுஷியா ஆனந்தசிங்கம் (மகாஜனா) மற்றும் அஸ்வினி திருச்செல்வம் (வட இந்து மகளிர்) (இருவருக்கும் முதலிடம்.)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுந்தரம் ஐயாத்துரை

நெட்டிலைப்பாய் கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி சுந்தரம் ஐயாத்துரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓட்டுக் கொம்பனி ஐயாத்துரையின் அன்பு மனைவியும் திருமதி சரோஜினி பத்மநாதன், திருமதி இந்திராணி நடராசா (லண்டன்), திருமதி சுபத்திரா கதிர்காமநாதன் (கென்யா), திருமதி தர்மவதி பரம்சோதி, திருமதி பத்மாவதி இராசரத்தினம் (கண்டி), பத்மநாதன் (ஆசிரியர், Science College யாழ்., Niru கோண்டாவில்), திருமதி சிறீமனோகரி சிறீரங்கன் (லண்டன்), இரகுலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி இராசகுமாரி பத்மநாதன், திருமதி தங்கம்மா இராகுலன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் "இந்திரபவனம்" நெட்டிலைப்பாய், கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (26-03-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஐ.பத்மநாதன் (மகன்)
சி.பத்மநாதன் (மருமகன்)
சு.பரம்சோதி (மருமகன்)

நெட்டிலைப்பாய்,
கோண்டாவில். (74852)

### செல்வன் கஜேந்திரகுமார் டனுசாந்

மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட கஜேந்திரகுமார் டனுசாந் நேற்று (25-03-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. திருமதி கஜேந்திரகுமார் ஜெயசிறி தம்பதியினரின் ஏகபுத்திரனும் திரு. திருமதி நல்லதம்பி பாலசிங்கம், காலஞ்சென்ற தேவி ஆகியோரின் பாசமிகு பேரனும் வசாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ். புகையிரத நிலையத்துக்கு அருகில் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலன் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு பேரனும் உதயகுமார், ஜெயக்குமார், சுரேந்திரகுமாரன் ஆகியோரின் பெறாமகனும் திரு. திருமதி கிருபானந்தன் உதயகலா, செல்வி. ஜெயகலா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது வசிப்பிடமான மட்டுவில் வடக்கில் நேற்று (25-03-2000) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.க.கஜேந்திரகுமாரன்
(யாழ். மணிக்கூட்டுத் தொழிலகம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (74850)

### திருமதி தம்பையா வள்ளியம்மை

சுருவில் ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் மோதரை கொழும்பினை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பையா வள்ளியம்மை நேற்று (25-03-2000) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் பாலசுந்தரம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற ருக்குமணி மற்றும் கணேசமூர்த்தி, தெட்சணாமூர்த்தி, லட்சுமிகாந்தன், ஜெயராணி, மதிவாணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு.சண்முகநாதன் (மருமகன்)

'குலஸ்தன்'
கொக்குவில் கிழக்கு. (74853)

## அக்கினிப் பெருமூச்சு நாடகம் நேர மாற்றம்

* காலம்:- ஞாயிறு 26-03-2000
காலை 10.30
மாலை 3.30
* இடம்:- கைலாசபதி அரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.

எமது பல்கலைக்கழக சக மாணவன் கோ.கனேசா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.
(74842)


## சிறந்த சோடாவிற்கு மாறுங்கள்

நெக்ரா - NECTA
ஒறேஞ் ஸ்பெசல் - ORANGE SPECIAL
ஜின்ஜர் பியர் - GINGER BEER
சம்ப் கோலா - CHAMP COLA
உப்புச் சோடா - SODA

இவை அமெரிக்கா, சுவீடன் தொழில்நுட்பத்துடனும் உள்ளீட்டுடனும் சர்வதேச தரத்திற்கு அமையவும் கொழும்புச் சோடாவிற்கு ஈடாகவும் காஸ் ஊட்டியும் தயாரிக்கப்பட்டவை.

தயாரிப்பு: BIO TEC, JAFFNA

(C/11510)

## இன்றைய வீடியோ வெளியீடு

நாகர்ஜுனின்
* ஷங்கர்
CD வெளியீடு
வெங்கட்டின்
* காதலே சாட்சி
அருண்பாண்டியனின்
* ஜாக்கிஜான்
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
விலை 300/=
ஆர்க் வீடியோ லைபிரறி
அம்மன் வீதி.
யாழ்ப்பாணம்.
(C/11537)

## எமது புதிய வீடியோ CD வெளியீடு

அருண்பாண்டியன், சுமன், சித்தாரா
நடிக்கும்
ஜக்கிஜான்
(தமிழ்)
பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/11538)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.